பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 5 சனிக்கிழமை (21-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:298

## தயவு தாட்சண்யத்துக்கு இனி இடமில்லை

# சமாதானத்திற்கு எதிரானவர்கள் எவரானாலும் பதவி நீக்கப்படுவர்

## அமெரிக்காவிலிருந்து பிரதமர் கடும் எச்சரிக்கை

நியூயோர்க்,செப்ரெம்பர்21

**தயவு தாட்சண்யம் இல்லை. சமாதானத்திற்கு எதிராகச் செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பதவி விலக்கப்படுவார்கள். அதற்குத் தயங்க மாட்டேன் என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

நியூயோர்க்கில் 'ஸ்ரீலங்கா முதன்மை' அமைப்பு ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இராணுவத்தினரோ, பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களோ எவரானாலும் அவர்கள் சமாதானத்திற்கு எதிராகச் செயற்படக்கூடாது. சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பம் இது. எனவே, சமாதான விரோதிகளைப் பதவியில் வைத்திருக்கக் கூடாது; வைத்திருக்கவும் மாட்டேன்.

சமாதானத்திற்கு எதிராகச் செயற்படுபவர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்துகொள்ளலாம். இல்லாவிடின் அவர்களை நான் பதவிநீக்கி விடுவேன்.

கடந்தகாலங்களில் தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் பாரிய நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

சமாதானத்திற்கான சரியான பாதையில் நாம் பயணிக்கிறோம். இதற்காக இன்னமும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. நாட்டில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை உள்ளது. இப்படிப் பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## முற்றுகைக்குள் அரபாத்!



மேற்குக் கரையிலுள்ள பலஸ்தீன தலைமையகத்தை முற்றுகையிட்டுள்ள இஸ்ரேலியப் படைகள் அங்குள்ள கட்டடங்களை தகர்த்தெறியத் தொடங்கியுள்ளன. தலைமையகத்திற்குள் அரபாத் சிக்குண்டுள்ளார். முற்றுகையைக் கைவிடுவதாயின் தலைமையகத்திலுள் ஒளிந்திருக்கும் சில தீவிரவாதிகள் சரணடைய வேண்டுமென்று இஸ்ரேல் நிபந்தனை விதித்திருக்கிறது.

*(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)*

## கிழக்கிலிருந்து புலிகள் தரைவழியே வன்னிக்கு!

### படையினரின் பாதுகாப்புடன்

வவுனியா,செப்.21

வன்னிக்கும் கிழக்குக்குமான விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்து காலநிலை சீரில்லாததால் தடைப்பட்டுள்ளதை அடுத்து இரு இடங்களுக்கும் இடையில் போராளிகளை தரைவழியாக அழைத்துச் செல்லும் பணி இன்று ஆரம்பமாகின்றது.

மட்டக்களப்பில் இருந்து 250 புலிப் போராளிகள் தரை வழியாக வன்னி செல்வதற்காக இன்று காலை புறப்படுவர்.

அவர்களுக்கு வழியெங்கும் இருநூறுக்கும் மேற்பட்ட படையினர் பாதுகாப்பை வழங்குவர் என்று பிரிகேடியர் சனத் கருணரத்ன தெரிவித்தார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளும் படையினருடன் செல்வர். கடல் போக்குவரத்து தடைப்பட்டதால் போராளிகள் விடுமுறையில் தமது உறவினர்களைப் பார்க்கச் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. (ஐ-3-12)

### எமது கட்சி எம்.பிக்களின் ஆதரவுடன்

## அரசமைப்புத் திருத்தத்தை நிச்சயம் தோற்கடிப்போம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சூளுரை

கொழும்பு,செப்.21

எமது கட்சியை உடைப்பதற்காகவே அரசு கொண்டுவந்துள்ள 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் நிச்சயம் தோல்வியடையும்.

எமது கட்சி எம்.பிக்களின் முழு ஆதரவுடன் இந்தச் சட்டத் திருத்தத்தை தோற்கடிப்போம். இது தொடர்பாக எமது கட்சி எம்பிக்களை தனித்தனியாக அழைத்துப் பேசியிருக்கிறோம்.

- இவ்வாறு கூறினார் எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

வத்தளைப் பிரதேச ஸ்ரீ ல.சு.கட்சியின் ஒன்றுகூடல் நேற்று வத்தளையில் நடைபெற்றது. அங்கு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானப் பேச்சுகளுக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். ஆனால்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டு முகாம்களிலுள்ள இலங்கை அகதிகள் மகிழ்ச்சி

### அரசு-புலிகள் பேச்சுக் குறித்து!

கன்னியாகுமரி,செப்.21

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற அமைதிப் பேச்சில் சமரசம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதையடுத்து தமிழ்நாடு குமரிமாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தில் களியக்காவிளை, ஞாறான்விளை, பெருமான்புரம், பழவிளை ஆகிய இடங்களில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 'சோக்கல்லோ' சண்முகம் பேசுவதில் உலக சாதனை!

கொழும்பு,செப்.21



மக்கள் கலைஞர் சோக்கல்லோ சண்முகம், பேசுவதில் நேற்று உலக சாதனை படைத்தார். உலகசாதனை ஏடான 'கின்னஸ்' புத்தகத்தில் சாதனையாளராக அவருடைய பெயர் பொறிக் கப்படுகிறது.

1960 செப்ரெம்பர் 26இல் கியூப ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ந்து 4மணி 29 நிமிடங்கள் பேசி அப்போது உலகசாதனை படைத்து 'கின்னஸ்' புத்தகத்தில் பெயர் பதித்தார்.

அவருடைய சாதனையை நேற்று சோக்கல்லோ சண்முகம் வெகு சுலபமாக முறியடித்தார். அவர் 'நானும் தமிழும்' என்ற தலைப்பில் 7 மணி 40 நிமிடங்கள் தொடர்ந்து பேசி கியூப ஜனாதிபதியின் முந்திய சாதனையை முறியடித்தார்.

சோக்கலோ சண்முகம் தமது சாதனை முயற்சியை தேசிய கலை இலக்கிய பேரவையின் அனுசரணையுடன்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் படகுகளுடன் விடுவிப்பு

கொழும்பு,செப்.21

மன்னார், பேசாலை மீனவர்களால் 24 மணிநேரமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 103 இந்திய மீனவர்கள், அவர்களின் 25 படகுகளுடன் நேற்று விடுவிக்கப்பட்டனர். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து, அவர்கள் இந்திய கடல் எல்லை வரை அழைத்துச் செல்லப்பட்டனர்

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் பேசாலை சென்று இலங்கை மீனவர்களுடன் நடத்திய பேச்சுகளை அடுத்தே இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவுவது தடுக்கப்படவேண்டும் என்ற இலங்கை மீனவர்களின் கோரிக்கையை இந்திய அரசின் கவனத்துக்கு கொண்டு வருவதாக தூதரக அதிகாரி உறுதி கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளாக இந்திய மீனவரால் தமக்கு ஏற்பட்டு வந்த இடையூறுகளுக்கு எதிரான தமது இப் போராட்டம் வெற்றிபெற்றிருப்பதாக பேசாலை மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் குரூஸ் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்கா விஜயம்

கொழும்பு,செப்.21

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அரசியல் குழுக் கூட்டத்தில் அவர் உரையாற்றவுள்ளார். அவர் அமெரிக்காவின் அரசியல் முக்கியஸ்தர்களையும் சந்தித்து உரையாடவிருக்கிறார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையின் கூட்டத்திலும் அவர் உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-4-12)

## கொழும்பில் இளம் டாக்டர் சுட்டுக்கொலை!

கொழும்பு,செப்.21

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் பணிபுரியும் இளம்டாக்டர் ஒருவர் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மகரகமவில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்த அந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி. தூதர் நேற்று யாழ் வருகை

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பான விவரங்களை ஆஸ்திரேலிய தூதுவர் டேவிட் பிஸ்ஸ் யாழ்.செயலக அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர் யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் து.வைத்தியலிங்கத்தைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், படையினர் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறியமை தொடர்பாகவும் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சேனையூரில் முகாமைத்தாக்கி ஊடுருவிய புலிப் போராளிகள்!

திருகோணமலை,செப்.21

பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் பார்த்திருக்க, பிரமாண்டமான முகாம் ஒன்றை கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்கி அதற்குள் ஊடுருவினர் புலிப்போராளிகள்.

நேற்று முன்தினம் திருகோணமலை, சேனையூர் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் போதே அவர்கள் இத் தாக்குதலை நடத்திக்காட்டினார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சேனையூர் மத்திய கல்லூரி மைதானத்தில் போர்ப் பயிற்சி ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் கனரக ஆயுதப் போர்ப் பயிற்சியை முடித்துக் கொண்ட புலிகளின் அணிவகுப்பும் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றன.

கரும்புலி மேஜர் தனுசனின் தந்தை தம்பாப்பிள்ளை தங்கராஜா

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## இந்தியா – இங்கிலாந்து மோதல் நாளை

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நாளை இந் தியா - இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன.

'மரணக்குழு' என வர்ணிக்கப் படும் குழு 2 இல் இவ்விரு அணி களும் இடம்பெற்றுள்ளன. மூன்றா வது அணியான ஸிம்பாப்வே தனது இரு போட்டிகளிலும் தோல்விய டைந்துள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணி கள் தலா ஒரு வெற்றியைப் பெற் றுள்ளன.

இவ்விரு அணிகளுக் கிடையி லான போட்டியில் வெற்றிபெறும் அணியே குழு 2இலிருந்து அரை யிறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய் யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்.பிரேமதாஸ அரங்கில் பகல் - இரவு ஆட்டமாக இப்போட்டி நடைபெறவுள்ளது.

இரு அணிகளுமே சமபல நிலை யில் உள்ளன. இறுதியாக கடந்த ஜுலை மாதம் நடைபெற்ற நட் வேஸ்ட் கிண்ணத்தொடரில் இவ் விரு அணிகளும் மோதின. அப் போட்டியில் இங்கிலாந்து அணியின் 325 ஓட்டங்களைக் கடந்து இந்திய அணி வென்றது.

இவ்வருடம் இந்தியா - இங்கி லாந்து அணிகள் 10 ஒரு நாள் போட்டிகளில் மோதியுள்ளன. 5 போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. 4 போட்டிகளில் இங்கி லாந்து அணி வென்றது. ஒரு போட்டி மழைகாரணமாக கைவிடப்பட்டது.

### பாக்.-நெதர்லாந்து போட்டி இன்று

பாக்கிஸ்தான், நெதர்லாந்து அணி களுக்கிடையிலான போட்டி இன்று நடைபெறவுள்ளது. எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் இப்போட்டி நடை பெறுகிறது.

இவ்விரு அணிகளும் ஏற்கனவே இலங்கையணியிடம் தோல்வியுற் றுள்ளன. அதனால் இக்குழுவிலி ருந்து இலங்கைஅணி அரையிறு தித் தகுதிபெற்றுள்ளமை குறிப்பி டத்தக்கது.

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்மாவட்ட பாடசாலைகள் துடுப் பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 13வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று காலை 8.30 மணி முதல் யாழ்.பரியோவான் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோத வுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாட சாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் த.தேவராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள் கின்றார்.

ஆரம்பத்தில் இருகல்லூரிகளின் அதிபர்களும் தமது கல்லூரிக் கொடி களை ஏற்றி வீரர்களை அறிமுகம் செய்துவைப்பர்.

இந்த ஆட்டம் பனை அபிவிருத்திச சபையின் அனுசரணையுடன் இடம் பெறும். (ஐ-3)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.பல்கலைக்கழக உடற் கல்வி மாணவர் மன்றத்தின் ஏற் பாட்டில் பல்கலைக்கழக ஆடுகளத் தில் இடம்பெற்றுவரும் ஹொக்கி சுற்றுப் போட்டியில் இன்று நடை பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 7.30மணி - யாழ்.பல் கலைக்கழக அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. அணி

★ காலை 8.30மணி - ஓல்ட் கோல்ட்ஸ் வி.க. எதிர் கரவெட்டி வி.க. (ஐ-ரி)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத் தும் லீக் முறையிலான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணி முதல் பாஷையூர் சென் அன்ரனீஸ் மைதா னத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வரு மாறு:-

★ பிற்பகல் 4மணி- சென்றோக்ஸ் வி.க. 'பி' அணி எதிர் பொற்பதி வி.க. 'பி' அணி.

★ பிற்பகல் 5.15மணி- பாடும் மீன் வி.க. 'ஏ' அணி எதிர் பொற்பதி வி.க. 'ஏ' அணி. (ஐ-3)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.21

ஏழாலை ஞானகலா விளையாட் டுக் கழகமும், ஞான கலா சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு நிலையத் தலைவர் எஸ்.குணபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக வலிகாமம் தெற்கு பிரதேச சபைத்தலைவர் கே.கமலசேகரம் கலந்து கொள்வார். (ஐ-ரி)

## ஆஸி.கிரிக்கெட் பயிற்றுநர்கள் யாழ்.மாணவர்களுக்கு பயிற்சி

ஆஸ்திரேலிய கிரிக்கெட் பயிற்று நர்களால் யாழ்.மாவட்டப் பாட சாலை மாணவர்களுக்கு நேற்று கிரிக்கெட் பயிற்சி வழங்கப்பட்டது.

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து வருகை தந்த ஆஸ்திரேலிய அணி யின் பயிற்றுநர் ஜோன் புச்சானன் மற்றும் துணைப் பயிற்றுநர் ரிம் நெல் சன் ஆகிய இருவரும் யாழ்.மத்திய கல்லூரியில் பயிற்சிகளை வழங்கி னார்கள்.

முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமான பயிற்சிகள் இருபிரிவு களாக இடம்பெற்றன. 15, 16 வய் துக்குட்பட்ட வீரர்களுக்கான பயிற்சி கள் முற்பகலிலும் 17, 18 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான பயிற்சிகள் பிற்பகலிலும் இடம்பெற்றன.

இப்பயிற்சிகளில் சுமார் 150 மாண வர்கள் கலந்துகொண்டனர். யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் ப்யிற்றுநர் களால் ஒருதொகுதி கிரிக்கெட் உபகர ணங்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இலங் கைக்கான ஆஸ்திரேலியத் தூதர் டேவிட் பின்ஸ் இந்த உபகரணங் களை கிரிக்கெட் சங்கத் தலைவரி டம் கையளித்தார். (ம-10-ரி)

# தனியார்துறையின் வர்த்தக மத்திய நிலையமாக இலங்கை மாற்றப்படும்!

## நியூயோர்க் முதலீட்டாளர்கள் மத்தியில் பிரதமர் ரணில் அறிவிப்பு

நியூயோர்க்,செப்.21

இலங்கையில் தனது அரசாங் கம் உருவாக்கத் தீர்மானித்திருக் கும் பொருளாதார மீள் கட்டமைப் புகளின் பிரதான காரணிகளைப் பிர தமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க, ஐரோப்பிய முதலீட்டாளர்களிடம் விளக்கிக் கூறியிருக்கிறார். உற் பத்திக்கும் முதலீட்டுக்குமான சகல தடைகளும் நீக்கப்பட்டு தனியார் துறை வர்த்தகத்திற்கான ஒரு மத் திய நிலையமாக இலங்கை உரு வாக்கப்படும் என்று அவர் தெரி வித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அபி விருத்தி செயற்திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நியூயோர்க் வர்த்தக சம்மேளனத்தின் கூட்டத்தில் பிரதமர் ரணில் உரையாற்றுகையில் இவற்றைத் தெரிவித்தார்.

நியூயோர்க் வொல்டொப் எஸ் டோரியா ஹொட்டலில் நேற்றுமுன் தினம் 'சமாதானத்திற்கான முதலீடு' என்னும் தலைப்பில் அவர் இந்த உரையை ஆற்றினார். இலங்கை வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் பல ரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முதலீட்டாளர்களுக்கு கிடைக் கும் வசதிகள் சம்பந்தமாக உயர்மட்ட அமைச்சரவை உபகுழு ஒன்று பரிசீ லனை செய்யும் எனவும் தெரிவித்த பிரதமர் ரணில் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

இலங்கை ஐந்து பொருளாதார வலயங்களாகப் பிரிக்கப்படும். ஒவ் வொரு வலயத்திற்கும் முகாமைத் துவ சபைகள் நிறுவப்படும். பொரு ளாதாரத்தை நிர்வகிக்கக்கூடியதாக முதலீட்டுசபை சட்டமூலத்தை திருத்தி புதிய சட்டங்கள் உருவாக்கப்படும்.

தற்பொழுது நடைமுறையிலுள்ள செலாவணி கட்டுப்பாடுச் சட்டம் நீக் கப்படும். அதற்குப் பதிலாக செலா வணி முகாமைத்துவச் சட்டம் கொண்டுவரப்படும்.

இந்தியாவுடன் செய்துகொள்ளப் பட்டிருக்கும் வர்த்தக உடன்படிக் கையைப் போன்று பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகியவற்றுடனும் வர்த்தக உடன்படிக்கைகளை இலங்கை செய்து கொள்ளும். - இவ்வாறு பிரதமர் ரணில் அங்கு விளக்கிக் கூறினார்.

இக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐ.நா.சபை யின் பிரதான நிர்வாகியான மார்க் பிரவுண், இலங்கையில் சமாதானத் தையும் நம்பிக்கையும் கட்டியெழுப் பத் தேவையான சகல உதவிக ளையும் பெற்றுக்கொடுக்க தமது அமைப்பு ஆயத்தமாக இருக்கிறது - என்றார்.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் ஆலோசனைப்படி, சர்வதேச நிறுவ னங்களின் ஒத்துழைப்புடன் இலங் கையை மீண்டும் ஓர் அழகான சொர்க்கபுரியாக மாற்ற தாம் நடவ டிக்கை எடுப்பதாகவும் அவர் சொன் னார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன், இலங்கை அரசு - புலிகளின் சமா தான நடவடிக்கைகளில் ஏற்பட்டிருக் கும் புதிய திருப்பம் குறித்து வர்த்த கர்களுக்கு விளக்கமளித்தார். பல வேறு முதலீடுகளுக்கு இலங்கை யில் நல்ல சந்தர்ப்பம் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

சமாதானப் பயணத்தின் போதே சமாதானத்திற்காக முதலீடு செய்ய வேண்டும்; சமாதானம் உருவானதன் பின் அல்ல என்றும் நோர்வே பிரதி யமைச்சர் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொரகொட, இலங்கையின் ஐ.நா.பிரதிநிதி கி.மகேந்திரன் ஆகி யோரும் இங்கு உரையாற்றினார் கள். (ஐ)

### இலவச மருத்துவ முகாமும் கண்பரிசோதனையும்

யாழ்ப்பாணம்,செப்.21

தீவக லயன்ஸ்கழக ஏற்பாட்டில் வேலணை துறையூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2.30 வரை இலவச மருத்துவ முகாமும் கண் பரிசோதனையும் நடைபெறும்.

சகல விதமான நோய்களுக்கான சிகிச்சையும் மருத்துவ பரிசோதனை களும் இடம்பெறும் என்றும் -

கண்பரிசோதனை செய்யப்பட்டு தேவையானவர்களுக்கு கண்ணா டிகள் வழங்கப்படும் என்றும்-

தீவக லயன்ஸ் கழகத் தலை வர் ப.தேவநாயகம் தெரிவித்தார். (ம)

**வள்ளம் கவிழ்ந்ததால்**

## கடலில் தத்தளித்த மீனவர்கள் படகின் உதவியுடன் மீட்பு

### அனலைதீவுக் கடலில் சம்பவம்

ஊர்காவற்றுறை,செப்.21

நடுக்கடலில் வள்ளம் கவிழ்ந்த தனால் கடலில் தத்தளித்த அன லைதீவு மீனவர்கள் மூவர் குடிதண் ணீர் விநியோகப் படகின் உதவியு டன் காப்பாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

மேற்படி மீனவர்கள் மூவரும் ஊர்காவற்றுறையில் இருந்து அனலை தீவு நோக்கி பாய்மரத்தின் உதவியு டன் வள்ளத்தைச் செலுத்திச் சென் றனர் என்றும் -

நடுக்கடலில் வள்ளம் கவிழ்ந்த தால் சுமார் ஒருமணி நேரம் இவர் கள் கடலில் தத்தளித்துக் கொண்டி ருந்தனர் என்றும் -

அதேவேளை - எழுவைதீவிற்கு குடிதண்ணீர் எடுத்துச் சென்ற ஊர் காவற்றுறை பிரதேசசபைக்குச் சொந்த மான படகு தத்தளித்துக் கொண் டிருந்த மீனவர்களை மீட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

### வண்டில் சவாரி

யாழ்ப்பாணம்,செப்.21

செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி. வடக்கு கிளையின் ஏற்பாட்டில் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது. (ஐ-3)

## கோபாலன் புகழ் பாடுவோம்!

**இராகம்: வரதரூபிணி** **தாளம்: ஆதி**

பல்லவி

ஸ்ரீசக்கரம் தரிசிக்க ஸ்ரீ வல்லிபுரம் சென்று
கோபாலன் புகழ் பாடுவோம் ~ நம்
குறை தீர்ந்து கொண்டாடுவோம் (ஸ்ரீ)

சரணங்கள்

1. மாபாவம் செய்தாலும் மன்னிக்கும் மகராசன்
மலர்ப்பாதம் தினம் சேவிப்போம் ~ அவன்
மலர்ப்பாதம் தினம் சேவிப்போம்
ஒரு கையில் திருச்சங்கு ஒரு கையில்
ஸ்ரீசக்கரம் உலகாளும் நம் நாயகன்
நம் உயிர் காக்கும் திரு நாயகன்
நம் உயிர் காக்கும் திரு நாயகன் (ஸ்ரீ)

2. உருகாத மனம் ஏது இரு காலை மறவாது
அதிகாலை பாராயணம்
அவன் திருநாமம் நாராயணம்
ஞாயிறுதோறும் திருவிழா அவனுக்கு
தீராத சந்தோசமே நன் நாதன் சந்நிதியில்
நம் நாதன் சந்நிதியில் (ஸ்ரீ)

**- புலோலியூர் வரதராசா மாணிக்கவேல்.**

*(வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்தத் திருவிழா இன்றாகும்)*



ஆஸ்திரேலிய கிரிக்கெட் பயிற்றுநர் குழு மாணவர்களுக்கு பயிற்சி வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். அருகில் கப்டன் சோமசுந்தரம், யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் வி.கே.சண்முகலிங்கம் ஆகியோரை முதலாவது படத்திலும் ஆஸ்திரேலிய பயிற்றுநர் குழு, கிரிக்கெட் விளையாட்டு நுட்பங்களை யாழ்.வீரர்களுக்கு பயிற்சியளிப்பதை அடுத்துள்ள படத்திலும், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி பயிற்றுநர் ஜோன் பென்ஷனன் யாழ்.வீரர்களுக்கு கைலாகுகொடுத்து விடைபெறுவதை இறுதியாகவுள்ள படத்திலும் காணலாம்.

## கடும் முற்றுகைக்குள் சிக்கினார் யஸீர் அரபாத்!

# பலஸ்தீன தலைமையக வளாகத்தில் கட்டடங்களை தகர்க்கிறது இஸ்ரேல்!

## தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கை

ரமழா,செப்.21

மேற்குக்கரையின் ரமழா நகரில் உள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமையகம் இஸ்ரேலிய இராணுவத்தினரின் கடும் முற்றுகைக்கு உள்ளாகியுள்ளது. இஸ்ரேலிய நகரான டெல்அவிவில் பலஸ்தீனத் தற்கொலையாளி தாக்குதல் நடத்திய சில மணி நேரங்களில் இஸ்ரேல் இந்தக் கடும் முற்றுகைத் தாக்குதலை ஆரம்பித்தது.

டெல்அவிவ் தற்கொலைத் தாக்குதலில் 5 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

ரமழா முற்றுகையைத் தொடர்ந்து அங்கு பாரிய வெடிச்சத்தம் கேட்டதாகவும் அரபாத்தின் தலைமையக வளாகத்தில் இருந்து பெரும் புகை மண்டலம் மேலெழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இஸ்ரேலியர்கள் வளாகத்துக்குள் இருந்த அலுவலகக் கட்டடங்களை குண்டுகளை வைத்துத் தகர்த்ததாலேயே இந்த பெரும் புகை மண்டலம் கிளம்பியதாக தெரிவிக்கப்படுகிறது. வளாகத்திலிருந்த கட்டங்களில் பதுங்கியிருந்து அரபாத்தின் மெய்ப்பாதுகாவலர்கள் இஸ்ரேலியப் படைகள் மீது நடத்தும் தற்காப்புத் தாக்குதல்களை முறியடிப்பதற்காகவே இஸ்ரேல் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இஸ்ரேலிய டாங்கிகளில் இருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரு பலஸ்தீன பாதுகாவலர்கள் ஆரம்பத்தில் காயமடைந்தனர்.

நேற்று முன்னதாக, இஸ்ரேலியப் படையினர் குறிபார்த்துச் சுட்டதில் பலஸ்தீன தலைமையக வளாகத்துக்குள் இருந்த பொலீஸார் ஒருவர் உயிரிழந்ததாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரேலியப் படைகளின் கடும் முற்றுகைக்கு உள்ளாகி இருக்கும் தலைமையக வளாகத்தின் உள்ளே யஸீர் அரபாத் சிக்கிக்கொண்டுள்ளார்.

தலைமையக வளாகத்துக்குள் பதுங்கியிருக்கும் முக்கிய சந்தேகநபர்களை ஒப்படைக்கும்வரை வளாகத்தை விட்டு வெளியேறப்போவதில்லை என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

### தற்கொலைத் தாக்குதல்

முன்னதாக, இஸ்ரேலிய நகரான டெல்அவிவில் பலஸ்தீன தற்கொலையாளி தாக்குதல் நடத்தினார். நகரப் பயணிகள் பஸ் ஒன்றின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.



டெல் அவிவ் தற்கொலைத் தாக்குதலில் காயமடைந்த இஸ்ரேலியர்களுக்கு வீதியோரத்தில் வைத்தே அவசர சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

இந்தத் தாக்குதலில் 5 இஸ்ரேலியர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். ஏனைய 50 பேர் காயமடைந்தனர். இவர்களில் பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். கடந்த இரு நாள்களில் இடம்பெற்ற இரண்டாவது தற்கொலைத் தாக்குதல் இதுவாகும்.

இதற்கு ஹமாஸ் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. இது இறுதியானதல்ல; இன்னும் தொடரும் என்று ஹமாஸ் அமைப்பின் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலையடுத்து அவசர அவசரமாகக் கூடிய இஸ்ரேலிய அமைச்சரவை அரபாத்தைத் தனிமைப்படுத்துவது என்று முடிவு செய்தது. அதனையடுத்தே பலஸ்தீனத் தலைமையகம் மீதான முற்றுகையை இஸ்ரேல் ஆரம்பித்தது.

இதுகுறித்து இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் "பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தால் நடத்தப்படுகின்ற கொடுமையானதும் கேடு கெட்டதுமான தீவிரவாதத்துக்கு எதிராக இஸ்ரேல் நீண்டகாலம் கடுமையாகப் போராடி வருகின்றது" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காஸா முற்றுகை

பலஸ்தீன அதிகார சபைக்குட்பட்ட காஸா பிரதேசமும் முற்றுகைக்கு உள்ளாகியுள்ளது. இஸ்ரேலிய இராணுவத்தின் இரு பிரிவுகள் இதில் ஈடுபட்டுள்ளன. ஒரு பிரிவு காஸாவின் எல்லைவரை முன்னேறி முற்றுகையிட, மற்றையது காஸா நகரங்களான பிடி லாஹியா மற்றும் பிடி ஹதுன் நகரங்களைச் சுற்றிவளைத்துள்ளது.

முற்றுகையில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலியடாங்கிகள் மற்றும் ஹெலிகள் கடும் தாக்குதலை நடத்துவதாக நேரில் கண்டவர்கள் கூறினர். இதில் சிக்கி இரு பலஸ்தீனர்கள் (ஓர் ஆண், ஒரு பெண்) உயிரிழந்தனர். காஸா பகுதியில் உள்ள இரும்புத் தொழிற்சாலைகளை இஸ்ரேலிய இராணுவம் இடித்து வருவதாகவும் அங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

தலைமையக வளாகத்திலிருந்த சிலர் ஏற்கனவே இஸ்ரேலிய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)



யஸீர் அரபாத்தின் தலைமையக வளாகத்திலுள்ள கட்டடங்களை இஸ்ரேலிய இராணுவம் வெடிகுண்டுகளை வைத்துத் தகர்த்ததை அடுத்து அங்கிருந்து புகைமண்டலம் பல அடி உயரத்துக்கு மேலெழுவதையும் அந்தப் புகைமண்டலத்தைத் தாண்டி இஸ்ரேலிய இராணுவ வாகனம் ஒன்று நகர்வதையும் படங்களில் காணலாம்.

## ஐ.நா. கண்காணிப்பாளர்கள் ஈராக் செல்வதைத் தடுக்க அமெ.முயற்சி

வாஷிங்ரன்,செப்.21

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் மீண்டும் ஈராக் செல்வதைத் தடுத்துநிறுத்தப்போவதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் இதனைத் தெரிவித்தார்.

ஆயுதக் கண்காணிப்பாளர்கள் ஈராக் திரும்புவதைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து விரைவில் கண்டறிவோம் என்றார் அவர். இதற்காக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் புதிய பிரேரணை ஒன்று கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர் குழுவின் தலைவர் ஹன்ஸ் அடுத்த மாதம் 15ஆம் திகதி தாம் மேலதிக குழுவுடன் ஈராக் செல்ல ஆர்வமாக இருப்பதாக பாதுகாப்புச் சபைக்குத் தெரிவித்தார். இதனையடுத்தே அமெரிக்கா மேற்படி நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

ஈராக் தொடர்பான விடயத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அமெரிக்கா விடுக்கும் இறுதி எச்சரிக்கை இது என்று பி.பி.ஸி. செய்தியாளர் ஜோன் லெனி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் -

ஈராக்கிடம் உள்ள ஆயுதங்கள் குறித்து அமெரிக்கா பொய்யான தகவல்களை வெளியிட்டுவருவதாகத் தெரிவிக்கும் ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் செய்தி ஒன்றை அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் நாஜி சப்ரி ஐ.நா.வுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அந்தச் செய்தியில், ஈராக் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்யவில்லை என்றும் சதாம் தெரிவித்துள்ளார்.(ம)

## அமெ. தளம்மீது ஆப்கானில் தாக்குதல்

காபூல்,செப்.21

கிழக்கு ஆப்கானில் நிலைகொண்டுள்ள அமெரிக்க துருப்பினர் மீது நேற்று திடீர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், இழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. 107 மீமீ ரொக்கெட் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பதிலுக்கு அமெரிக்க துருப்பினரும் தாக்குதல் நடத்தினர். சுமார் 2 மணி நேரம் இந்தச் சண்டை இடம்பெற்றுள்ளது. லெஸாராவுக்கு அருகில் உள்ள அமெரிக்கத் தளமே தாக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் கேணல் ரொஜர் கிங் தெரிவித்தார். அமெரிக்கத் துருப்பினருக்கு இந்தத் தாக்குதலால் உயிரிழப்போ சேதமோ ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஆப்கானின கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் உள்ள அமெரிக்கத் தளங்கள் ரொக்கட் தாக்குதலுக்கு இலக்காவது வழமை. ஆனால், நேற்று நடந்த சம்பவத்தில் தாக்குதலாளிகள் அப்பகுதியில் தரித்துநின்று தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர் என்பதே வழமைக்கு மாறானது. (ம)

## ஐவரிகோஸ்டில் மேற்கொள்ளப்பட்ட பதவி கவிழ்ப்பு முயற்சி முறியடிப்பு!

லண்டன்,செப்.21

ஐவரிகோஸ்டில் அதிபர் காபோவை பதவி கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. கிளர்ச்சிப் படைகளின் தலைவர் முன்னாள் ஜெனரல் ரொபேர்ட் குயி சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து புரட்சி முடிவுக்கு வந்தது.

ஆட்சியைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாக பிரதமர் பஸ்கால் அபி நுகுஸான் நேற்று அறிவித்தார். ஒருநாள் முழுவதும் தொடர்ந்த சண்டை முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து மக்களைத் தமது நாளாந்தக் கடமைகளுக்குத் திரும்புமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆனால், எதிர்ப் புரட்சியாளர்கள் நாற்றுக்கணக்கில் இன்னமும் சில இடங்களில் தரித்து நிற்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்கள் கைப்பற்றிய இடங்களில் இருந்து அவர்களை வெளியேற்றும் சண்டைகளில் அரச படையினர் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக, ஜெனரல் குயி தலைமையிலான கிளர்ச்சிப் படையினர் நேற்றுமுன்தினம் காலை ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்குடன் இரண்டாவது பெரிய நகரான அபிஜானில் பெரும் தாக்குதலை நடத்தினர். அங்கிருந்த பெரும்பாலான பொலீஸ் நிலையங்களை அவர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

கிளர்ச்சிப்படையினரில் பெரும்பாலானவர்கள் இராணுவத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களாவர். தம்மை மீண்டும் இராணுவத்தில் இணைத்கொள்ளவேண்டும் என்று அவர்கள் கோரிவந்தனர்.

இவர்களது கிளர்ச்சி முயற்சியின்போது நடைபெற்ற சண்டையில் 80 பேர் கொல்லப்பட்டனர். 150இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

தற்போது கிளர்ச்சி இடம்பெற்ற அபிஜானிலும் மற்றும் இரு நகரங்களிலும் இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கிய ஜெனரல் குயி 1999 இல் பதவியில் இருந்து அகற்றப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் அரச படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே கிளர்ச்சி முடிவுக்கு வந்தது. (ம)

| | | | |
|---|---|---|---|
| சந். | | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வி. |
| | | | செவ். புதன் |
| | கேது | வெள். | சூரி. ▲ |

மாற்றம்:

23.09.2002இல் உத்தரட்டாதி மீனத்தில் சந்திரன் நிற்கும். சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறும். அடிப்படை இலக்கை அடையக் காலம் செல்லும். படிப்படியான பேச்சுக்களில் பல விடயங்கள் அனுகிப் பேசித் தீரும். தெற்கில் பலதரப்பட்ட அபிப்பிராயப் பேதங்கள அரசியல்வாதிகளிடையே ஏற்பட்டபடி இருக்கும். இந்தியாவில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்கும். இந்தியாவின் வடக்கே யுத்த அபாயம் தோன்றும். மத்திய கிழக்கு - ஈராக் - பலஸ்தீனம் - இஸ்ரேலில் தொடர் சம்பவங்கள் தோன்றலாம். அமெரிக்கா ஐ. நா. மூலம் சில இடங்களில் வலுக்கட்டாயமான பொருளாதார அழுத்தங்களைக் கொடுக்கும். இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் காற்றின் அழுத்தம் அதிகரிக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

# 22.09.2002 ~ 28.09.2002

## மேடம்

விளக்கு அணையும் பொழுது பெரிதாக எரிந்தோ, மின்னியோ அணைந்துவிடும். அதேபோன்று, ஒருவருக்கு அழிவுகாலம் நெருங்கும் பொழுது நல்லவர்களை எதிர்த்து - சட்டத்திற்கு மாறாகச் செயற்பட்டு தண்டனைகளைப் பெற்று அணைந்து விடுகின்றார்கள். பொருள்வரவு, வீடு, வாகன சுகம் கிடைக்கும். அடிக்கடி கோபம் வரும். எதிர்ப்பாலாரின் அன்பு, ஆதரவு, உதவிகள் கிடைக்கும். சகோதரர்களின் உதவிகள் கிடைக்கும். காது நோய், பித்த வருத்தம், வயிற்று நோ என்பன வருத்தும். மருந்துத் துறை, கமிஷன்துறை, நகைத்துறை, கலைத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், சனி.*

## இடபம்

கருக்கட்டி காற்றடித்துத்தான் மழை பெய்யும். அதேபோன்று, எந்த விடயமும் காரண காரியப் போராட்டம் நடந்துதான் அலுவல்கள் நடக்கும். கடுங்கோபம் அடிக்கடி வரும். மேலதிகாரிகளுடன் தொழில் ஸ்தானத்தில் வாக்குக் கலகம் ஏற்படும். மந்திரமாயமென அலைதல், ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். நாரிநோ, உஷ்ணபீடைகள் கொடுக்கும். செய்தித்துறை. வியாபாரத்துறை, மருந்துத்துறை, கடல்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், சனி.*

## மிதுனம்

பலவீனமானவனை பலவான் பலவந்தப்படுத்தித்தான் காரியங்களைச் சாதிக்கின்றான். ஈராக்கை அமெரிக்கா அடித்து உயிரியல் அணு ஆயுதப் பரிசோதனைக்கு நிர்ப்பந்தப் படுத்துவதுபோன்று, தொழில் ஸ்தானத்தில் சம்பவங்கள் நடக்கும். அயலவர்கள் பொறாமையால் புழுங்குவார்கள். திடீர்ப் பிரயாணம் கொடுக்கலாம். வாய்வுத் தொல்லை, காய்ச்சல் கொடுக்கும். மாணவர்கள் நன்மை அடைவார்கள். கை, கால் பிடிப்பு, வாய்வுத் தொல்லை கொடுக்கும். போக்குவரத்துத்துறை, புடைவைத் துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், சனி.*

## கடகம்

இடாம்பீகப் பொருள்களை வாங்க வாங்க வசதிகள் வரும். பணச்செலவு கட்டுமீறிப் போகும். வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் நலிவுற்றவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பதைக் கண்டு மனம புழுங்குவீர்கள். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை வரும். நண்பர்களின் உதவிகள், செய்தி தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள். மேலும் சலப் பிழை, சிரசு வருத்தம், கால், கை உளைவு என்பன கொடுக்கும். நகைத்துறை, மருந்துத்துறை, எண்ணெய்த்துறை, போக்குவரத்துத் துறை போன்றோர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், சனி.*

## சிங்கம்

மக்களுடன் - மக்களாக அன்பாக இருப்பதனால் நன்மைகளை எல்லோரும் அடையலாம். தொழில் ஸ்தானத்தில் அன்பாக இருந்து செயற படுங்கள். தொழில் ஸ்தானத்தில் சிலா கோள்சொல்லித் திரிவார்கள். மறைமுகமாகப் போட்டி போடுவார்கள். ஆனால், உங்களை வெல்ல முடியாது. பிறருக்கு ஆலோசனை சொல வீர்கள். அரசியல்வாதிகளின் உதவிகள் கிடைக்கும். வீடு, வாகன யோகம் கிடைக்கும். உஷ்ணபீடைகள், சளி கொடுக்கும். பொருளில் கவனம். மாணவர்களுக்குப் புதிய இடமாற்றம் அல்லது புதிய பொறுப்புக்கள் கிடைகக்கும். மருந்துத்துறை, மினசாரத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், சனி.*

## கன்னி

அறியாமையால் பல தப்புக்கள் நடக்கின்றன. நெடுந்தூரப் பிரயாணங்கள் பலருக்குப் புதுப்புது அனுபவங்கள் வந்து தப்புக்களைத் தடுக்கின்றன. தொழில் ஸ்தானத்தில் புதியவர்கள் வருவர். மேலதிகாரிகள் வாழ்த்துவர். பணவரவு இருக்கும். ஆடை, ஆபரணம் சேர வாய்ப்பு உண்டு. சகோதரர்களுக்கு சிறப்பு மாற்றங்கள் கொடுக்கும். நாரிநோ, கால் பிடிப்பு, சளித்தொல்லை என்பன கொடுக்கும். செய்தித்துறை, போக்குவரத்துத்துறை, குருத்துறையினர் சிறப்பு அடைவார்கள். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் கொடுக்க இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள, புதன், சனி.*

## துலாம்

எதையும் விடாது போராடிப் பெற்று விடலாம்? காலம் கடந்து சென்று விடிவைத்தரும். துணிந்து நின்று வெற்றிபெற வேண்டும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் கொடுக்கும். தூரத்துச் செய்திகள் வரும். வாகனங்களில் பொருள் செலவு அல்லது இழப்பு ஏற்படும். பெற்றோருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். சகோதரர், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தெய்வபக்தி மிகுந்து காணப்படும். பெரியவர்களின் ஆசீர்வாதம் இருக்கும். குடல்வருத்தம், வயிற்றுநோ, கால்பிடிப்பு என்பன இருக்கும். மாணவர்கள் சிறப்பு அடைவர். ஹோட்டல்துறை, பிரயாணத்துறை, நகைத்துறை, புடைவைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள், நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள, புதன், சனி.*

## விருச்சிகம்

வைத்திய மூலிகைகள் அருகி வருவதனாலும், அதிக செலவு கூலிகளுக்கு கொடுக்கவேண்டி இருப்பதனாலும் மருந்துச் செலவு அதிகம். நாம் எப்படி இலவச வைத்தியம் செய்யமுடியும்? என பல வைத்தியர்கள் கேட்பதில் நியாயமுண்டு. தொழில் ஸ்தானத்தில் எதிர்புக்கள் வரும். பொருள் செலவுகள் அதிகரிக்கும், பொருள்வரவு இருக்கும். மாணவர்கள் சிறப்பு அடைவார்கள். பொருளில் கவனம். கொடுத்தது வராதநிலை ஏற்படும். தொண்டை வருத்தம், கால்பிடிப்பு, அடிவயிற்றில் நோ வரும். பேச்சுச் சாதுரியத்தால் நன்மைகள் ஏற்படும் சட்டத்துறை, எண்ணெய்த்துறை, வங்கித்துறை போன்ற துறையினர் நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

## தனுசு

அனுபவம் என்பது பலதரப்பட்டவர்களுக்குப் பலவிதமான உணர்வு பூர்வமான ஆக்கங்களை உருவாக்கித் தரவல்லதாக இருக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும் பொருள வரவு இருக்கும். மாணவர்களுக்கு சித்திகள் கிடைக்கும். தூரத்துச் செய்திகள் சோதனை கொடுக்கும். வீடு மனை, வாகனச் சிறப்புக்கள் கொடுக்கும். கால் வருத்தம், களைப்பு, உஷ்ணபீடைகள் கொடுக்கும். வாகனம் கவனம். சட்டத்துறை, குருத் துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மையான பலா பலன்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன்.*

## மகரம்

மின்சாரக்கட்டணம், ரெலிபோனில் அதிக வருமானம் அற்றவர்களுக்கு பெரும்பாரச் சுமையாகத் தான் இருக்கின்றது. தங்களது தரங்களை, தேவைகளைப் பூர்த்திசெய்ய எத்தனை போராட்டம் மனிதர்களுக்கு. தொழில் ஸ்தானத்தில் பணவரவு கொடுக்கும். வீட்டில் மனக்கருத்து. எதிரிகள் பயந்து ஓடுவர். கலைத்

# மகாதேவா ஜோதிடம்

துறையில் நாட்டம் கொள்வீர்கள். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும். நாரிப்பிடிப்பு, கால்வருத்தம், உஷ்ணபீடைகள் கொடுக்கும். நகைத் துறை, செய்தித்துறை, ரி.வி.துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், சனி.*

## கும்பம்

உண்மையான இரு காதல் உள்ளங்கள் காலம் கடந்தாலும் வாழ்வில் ஒரு முடிவை நாடித் தேடி விடும். தொழில் ஸ்தானத்தில் நண்பர்களின் உதவிகளால் நன்மைகள் ஏற்படும். எதிர்ப்பாலாருடன் கவனமாக இருக்கவும் அல்லது வீண் பழி கேட்க நேரிடும். மாணவர்களுக்குப் புதிய மாற்றங்கள் ஏற்படும். பிறருக்கு ஆலோசனை சொல்லுதல், திடீர் பொருள் வரவு, பிள்ளைகளாலும், சகோதரங்களாலும் யோசனை வரும். நாரிநோ, கால்வருத்தம், சளித தொல்லை, கண் புகைச்சல் என்பன கொடுக்கும். ரி.வி., டெக் துறை, சாய்ப்புப் பொருள்கள விற்பனை, வங்கித்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், சனி.*

## மீனம்

நடிப்பு வேறு, உண்மை வாழ்வு வேறு என்பதை நடிகர் திலகம் வாழ்ந்து காட்டியுள்ளார். அறிவு வேறு, மதுப்புட்டி வாழ்வு வேறு என எழுதிக் காட்டினார் கவிஞர் கண்ணதாசன். நாம் உறுதி வேறு, எமது உழைப்பு வேறு எனக் காட்டவேண்டாமா? தொழில் ஸ்தானத்தில் தீவிர முன்னேற்ற முயற்சிக்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். எதிர்ப்பாலர் உதவி, ஓடியாடித் திரிந்து பொருள் தேடுதல், பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். பொருள் வரவு வரும். சளி, கால்வருத்தம், வாய்வுத் தொல்லைவரும். மருந்துத்துறை, நீதித்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், சனி.* ★

# சங்கடந்தீர்க்கின்ற சனிபகவானை எங்குறை தீர வழிபட்டு உய்வோம்!

கன்னி மாதம் எனப்படும் புரட்டாதி மாதம் விழாக்களும் நோன்புகளும் நிறைந்த புண்ணிய மாத மாகும். விஷ்ணுவுக்கும் அம்பிகைக்கும் சிறப்பாகச் சொல்லப்படும் இம் மாதம் மிக மகிமை மிக்கது.

புரட்டாதி என்றவுடனேயே முதலில் நம் ஞாபகத்திற்கு வருவது புரட்டாதிச் சனியாகும். கன்னிகா விருட்சம் உருவாகிய தினம் புரட்டாதி மாத முதல் சனியாகும். இத் தினத்திலேயே சூரியபகவானின் இச்சா சக்தியாகிய உஷாதேவியிடம் சூரியனுக்குப் புத்திரனாகச் சனீஸ்வரன் தோன்றினான் என்பது புராண வரலாறு.

புரட்டாதிச் சனி விரதமிருப்பவர்கள் நல்லெண்ணெய் தேய்த்து முழுகி சனீஸ்வரனுக்கு எள்ளெண்ணெய் விளக்கெரித்து, எள்ளுச் சாதம் நிவேதனமிட்டு, கறுப்புப்பட்டுச் சாத்தி வழிபடுவது முறையாகும். சங்கடந்தீர்க்கும் சனீஸ்வரனின் வாகனமாகிய காகத்திற்கும் குற்றமற்ற அன்னம் இடுவதும் வழக்கமாகும்.

சனி தோஷமுள்ளவர்கள் - ஏழரைச்சனி, அட்டமத்துச்சனி உள்ளவர்கள் - மேற்படி விரதமிருந்து எள்ளு, கறுப்புத்துணி, நல்லெண்ணெய் முதலியவற்றைத் தானம் செய்வது சிறந்தது. நீலரத்தினம் பதித்த மோதி

**திருமதி கௌரி சுரேசன்**

ரம் போன்ற ஆபரணங்களை அணிவது நன்மையைத்தரும். இத்தினத்தில் சனிக்கு அதிபதியான விஷ்ணுவுக்கும் வழிபாடியற்றல் சிறந்த பலனைத் தரும்.

விஷ்ணு சகஸ்ரநாம தோத்திரத்தை சனிக்கிழமைகளில் விஷ்ணு சந்நிதானத்தில் பாராயணம் செய்யலாம்.

அம்பிகையின் மிகச் சிறந்த விரதமாகவும் விழாவாகவும் கொண்டாடப்படுவது நவராத்திரியாகும். வீரத்தையும் செல்வத்தையும் கல்வியையும் வேண்டி துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களை வழுத்துவதே நவராத்திரி. புரட்டாதி மாத சுக்லபட்ச பிரதமை முதல் நவமிவரை ஒன்பது தினங்கள் அனுஷ்டித்துப் பத்தாம் நாளாகிய விஜய தசமியுடன் விரதம் பூர்த்தியாகும்.

பத்தாம் நாளாகிய தசமி - விஜய தசமியன்று வன்னி வாழை வெட்டுதல் என்னும் மானம்பூ உற்சவம் நடைபெறும். இது மகிடாசுர வதத்தை நினைவூட்டும் நிகழ்வாகும்.

கேதார கௌரி விரதம் என அழைக்கப்படும் திருக்கேதாரேஸ்வர விரதம் சக்தி விரதங்களுள் ஒன்று என்ற தப்பபிப்பிராயம் நிலவுகிறது. கேதாரேஸ்வரரை அடைவதற்குக் கேதார கௌரி அம்பாள் பூஜித்து வழிபட்ட விரதமாகையால் இவ்விரதத்திற்கு இப்பெயர் வந்தது. உண்மையில் இது சிவலிங்கப்

## புண்ணியம் சேர்க்கும் புரட்டாதி மாதம்

பெருமானைக் கருதி அனுஷ்டிக்கும் விரதமாகும்.

ஐப்பசி மாதத்து அமாவாசையில் முடிவுறும் வகையில் 21 நாள்கள் அனுஷ்டிக்கப்படும் கேதார கௌரி விரதம் பெரும்பாலும் புரட்டாதி மாத வளர்பிறை நவமிக்கு அடுத்த நாள் தொடங்குகிறது. இருபத்தொரு நாளும் சங்கற்ப பூர்வமாக விரதமிருந்து எள்ளுருண்டை, மஞ்சள் உருண்டை, அதிரசம், வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு என்பவற்றை வகைக்கு ஒன்றாகத் தினமும் கேதாரேஸ்வரப் பெருமானுக்கு நிவேதித்து வழிபட்டு வரல்வேண்டும்.

இறுதிநாள் உபவாசமிருந்து அதிரசம், சர்க்கரை உருண்டை, மஞ்சள் உருண்டை, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றில் இருபத்தொரு எண்ணிக்கை வைத்து நிவேதனம் செய்து இருபத்தொரு இழைகொண்ட நூலில் இருபத்தொரு முடிச்சு இட்டு இதனை முறைப்படி காப்புக் கட்டுதல் வேண்டும். மறுநாள் பாரணை செய்யலாம்.

இவ்விரதத்தைப் பக்திபூர்வமாக அனுஷ்டிப்பதன் மூலம் தம்பதிகளுக்கு மகிழ்ச்சியான இல்லற வாழ்வும், நன் மக்கட்பேறும், கன்னியருக்குத் திருமணப் பேறும் இவ் விரதப் பலனாகும்.

நடராஜப் பெருமானின் ஆறு அபிடேகத் தினங்களில் புரட்டாதி மாதத்து வளர்பிறைச் சதுர்த்தசித் தினமும் ஒன்றாகும். அன்று நடராஜருக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவது மரபு.

வைஷ்ணவ விரதங்களில் ஒன்றாகிய அனந்த பத்மநாப விரதம்-வறுமை நீங்கிச் செல்வம் பெறுவதற்காக அனுஷ்டிக்கப்படுகிறது. புரட்டாதி மாத வளர்பிறைச் சதுர்த்தசியில் விரதமிருந்து 14 முடிச்சுக்களுடன் காப்புக் கட்டுதல் முறை. 14 வருடங்கள் இவ்விரதம் கைக்கொள்ளுதல் வேண்டும். இதை பாண்டவர்கள் வனவாசத்தின்போது கிருஷ்ணனிடம் உபதேசம் பெற்று அனுட்டித்தனர்.

ரிஷி பஞ்சமி எனப்படும் விரதமானது புரட்டாதி மாதத்தில் வளர்பிறைப் பஞ்சமியில் அனுஷ்டிக்கப்படுவதாகும். அறிந்தோ, அறியாமலோ, மாதவிலக்கான காலங்களில் சாதாரணமாக நடமாடி எல்லாப் பொருள்களையும் கையாண்டு மற்றவர்களுடன் கலந்து பழகுவதால் ஏற்படும் தோஷங்களும் பாவங்களும் நீங்குவதற்காக இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

வழமைபோல், காலைக்கடன்களை நிறைவேற்றி மதியவேளையில் (பஞ்சமி வியாபித்திருக்கும் வேளையில்) நாயுருவி வேரினால் பல்துலக்கி, இறைத்துப் புனிதமாக்கிய கிணற்றுக்கு ஜமுனா பூஜை செய்து நீராடி பின் சப்த ரிஷிகளுக்கும் அருந்ததிக்கும் முறைப்படி கும்பங்களைச் ஸ்தாபித்துப் பூஜை செய்யவேண்டும். பின் ஆசார சீலர்களான பிராமணத் தம்பதிகளை அழைத்துத் தம்பதி பூசை செய்து தட்சணை வழங்கி, ஆலய வழிபாடு செய்து ஒருநேர உணவு உண்ணல் வேண்டும். இவ்வாறு ஏழு வருடங்கள் இவ்விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருநாளைப் போவார், ஏனாதி நாயனார், நரசிங்க முனையர் ஆகியோரினதும், சந்தான குரவரான அருணந்தி சிவாச்சாரியாரினதும், அருணகிரிநாதரினதும், ஆழ்வார்களில் ஒருவரான பெரிய திருமலை நம்பியினதும் குருபூசைத் தினங்களும் புரட்டாதி மதத்திலேயே வருகின்றன.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த புரட்டாதி மாதம் பிறந்திருக்கிறது நாம் அனைவரும் விரதங்களை அனுட்டித்து, விழாக்களைக் கொண்டாடி நற்பேறு பெறுவோமாக.

★

# உதயன்

## 19ஆவது திருத்தம்

பெரும் சர்ச்சைக்கு உள்ளாகிவிட்ட 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவு நேற்றுமுன் தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

சபை முதல்வர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார சுபநேரம் பார்த்து மாலை 3.15 மணி அளவில் திருத்தச் சட்ட வரைவைச் சமர்ப்பித்தார்.

இந்தச் சட்டவரைவை எதிர்க்கட்சிகள் எவ்வளவுதூரம் எதிர்க்கின்றன என்பதை நாடாளுமன்றத்தில் காணக்கூடியதாக இருந்தது.

எல்லாம் நல்லபடியாக நடக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அரசாங்கம் நேரம், காலம் பார்த்து, ராகுகாலத்தை தவிர்த்து சுபவேளையில் சட்டவரைவைச் சமர்ப்பிக்க விரும்பியது.

அப்படிச் செய்யவிடாமல் தடுப்பதற்குத் தம்மால் இயன்ற எல்லாவழிகளையும் எதிர்க்கட்சியினர் மேற்கொண்டனர்.

மரணமடைந்த எம்.பிக்களுக்குச் சபை அனுதாபம் தெரிவிக்கும் நாள் நேற்று முன்தினம். சபை விதிகளின் படியும் மரபுப்படியும் நாடாளுமன்றம் கூடியதும் அனுதாபப் பிரேரணைகளுக்கே முன்னுரிமை. மற்றெல்லா விடயங்களும் பின்னர்தான்.

அனுதாபப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு முடிந்ததும் ராகுகாலம் தொடங்கும் 12.01இற்கு முதல் திருத்தச் சட்டவரைவைச் சமர்ப்பிக்கச் சபை முதல்வர் காத்திருந்தார்.

ஆனால், எதிர்க்கட்சியினரோ அதற்கு அவருக்கு இடங்கொடுக்காமல் அனுதாபப் பிரேரணைமீது வழக்கத்துக்கு மாறாக நீண்டநேரம் பேசினர். அந்த வகையில் நேரத்தைக் கடத்திக்கொண்டே இருந்தனர்.

பொதுவாக அனுதாபப் பிரேரணைகளின்போது ஜே.வி.பியினர் சபையில் இருப்பதில்லை. வழக்கத்துக்கு மாறாக ஜே.வி.பியினர் சபையில் பிரசன்னமாகி இருந்தனர். அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் அதைச் சுட்டிக்காட்டி "என்ன ஆச்சரியம்!" என்று குத்தலும் விட்டார்.

அந்த அளவுக்கு ஜே.வி.பியினர் இந்த விஷயத்தில் உஷாராக இருந்தார்கள்.

என்றாலும் அரசாங்கம் தான் விரும்பியதைச் செய்துமுடித்துவிட்டது.

அனுதாபப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதும் சபை முதல்வர் லொக்கு பண்டார திருத்தச் சட்ட வரைவைச் சபையில் சமர்ப்பித்தார். அப்போது நேரம் 3.15; ராகுகாலம் முடிந்துவிட்டது.

19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் முதல் சட்ட நடவடிக்கையில் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் நேரக் கடத்தல் தந்திரத்துக்கு இடையிலும் தான் நினைத்ததைச் செய்து வெற்றி பெற்றுவிட்டது.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இப்போது நீதிமன்றம் வரை சென்றுவிட்டது.

இந்தச் சட்டவரைவை எதிர்த்து லங்கா சம சமாஜக் கட்சி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருக்கிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்கும் நிலையான சமாதானம் ஏற்படுவதற்கும் இந்தச் சட்டத்திருத்தம் அவசியமானதாகும். அரசாங்கமும் புலிகளும் பேசி இணக்கம் காணும் விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு நாடாளுமன்றம் அந்த முடிவுகளை அங்கீகரித்து அவற்றிற்குச் சட்டவலு கொடுக்க வேண்டும்.

இப்போதுள்ள அரசமைப்பு விதிகளின்படி நாடாளுமன்றத்துக்கு ஒரு வருடம் பூர்த்தியானதும் எந்த நேரத்திலும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைத் தன்னிச்சைப்படி கலைக்கலாம்.

ஜனாதிபதிக்கு உள்ள இந்த அளவுக்கு மிஞ்சிய மேலாதிக்க அதிகாரத்தை நீக்கி நாடாளுமன்றம் கலைக்கப்படாமல் உறுதி செய்வதற்கே 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவு.

இந்தச் சட்டவரைவை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றவேண்டும். அரசாங்கத்திடம் அந்தப் பெரும்பான்மைப் பலம் கிடையாது. அதனால் எதிர்க்கட்சியினர் சிலரின் வாக்குகளையும் பெறுவதற்காக எம்.பிக்கள் தத்தமது கட்சிகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உள்ளாகாமலும், பதவி இழக்கும் ஆபத்து இல்லாமலும் மனச்சாட்சிப்படி வாக்களிக்க இந்தத் திருத்தச் சட்டவரைவு இடமளிக்கிறது.

ஆகவே, நாட்டு நலனிலும் மக்களின் நல்வாழ்விலும் அக்கறை கொண்ட எவரும் 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவை எதிர்க்க நியாயமில்லை. எதிர்ப்பவர்களைத் தேசத்துரோகிகள் என்று மக்கள் அடையாளம் கண்டுகொள்வர்.

நான் நேசித்த தமிழ் மண்ணில் வாழுகின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்காக பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்.
- *லெப். கேணல் திலீபன்.*



# பேச்சுமூலம் தீர்வை எட்டுவதற்கு சீனா முழுமையாக ஒத்துழைக்கும்

## அந்த நாட்டுத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் நடைபெறும் பேச்சுமூலம் இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு சீன அரசு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

- இவ்வாறு யாழ்.செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இலங்கைக்கான சீனத் தூதர் ஜியாங் ஹிங்கெங் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் நல்லதொரு முறையில் நடைபெற்று வருகின்றது. இருதரப்பும் இதய சுத்தியுடன் இதில் கலந்துகொண்டுள்ளன என்பது எமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இதன்மூலம் இருதரப்பும் இணைந்து ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வரவேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்க சீன அரசு தயாராகவுள்ளது.



நேற்று யாழ்.வருகை தந்த சீன நாட்டுத் தூதர் ஜியாங் ஹிங்கொங், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் மற்றும் செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடுகிறார்.
*(படம்: தேவராஜன்)*

இப்போது யாழ்.குடாநாட்டில் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. யாழில் மட்டுமல்ல இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பொதுமக்கள் நிரந்தர சமாதானத்தைப் பற்றித்தான் பேசிக்கொள்கிறார்கள். இதன்மூலம் இங்குள்ள மக்கள் அனைவரும் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பது தெரிகிறது.

எனது நாட்டு அரசின் சார்பில் இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிய நான் வந்துள்ளேன். இங்கு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி கட்டுமானப் பணிகளுக்கு உதவுவது தொடர்பாக ஆராய்வதற்காகவே எனது விஜயம் அமைந்துள்ளது. இதனடிப்படையில் இங்குள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு சீனா நிச்சயம் உதவிபுரியும் - என்றார்.

யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

கடந்தகால யுத்தத்தின் பயனாக எமது மக்கள் பாரிய அழிவுகளை எதிர்நோக்கினார்கள். அவர்களுடைய இல்லிடங்கள் பாரிய சேதத்திற்குள்ளாக்கப்பட்டன. சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு 3 ஆயிரத்து 685 மில்லியன் ரூபாக்கள தேவையாக உள்ளது. இதற்கு சீன அரசு உதவிபுரிய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ்.செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-8)

## 'நியாப்' திட்டத்தின்கீழ்

# உவர்நீர் தடுப்பு அணைகள் தீவுப் பகுதியில் புனரமைப்பு

இணுவில்,செப்.21

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின்(நியாப்) கீழ் தீவுப் பகுதிகளிலுள்ள உவர்நீர் தடுப்பு அணைகள் புனரமைக்கப்பட்டு வருகிறன.

யாழ்.நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் ஊடாக இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கரம்பொன் குறுக்குக்கடல் உவர்நீர் தடுப்பு அணை, சாம்பலோடை உவர்நீர் தடுப்பு அணை போன்றவற்றின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன.

இதேவேளை - சரவணை உவநீர் தடுப்பு அணை வேலைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி புனரமைப்பு வேலைகளை அந்தந்த இடங்களைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள்மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மேற்படி சங்க உறுப்பினர்களுக்கான வேலை தொடர்பான பயிற்சியை நீர்ப்பாசன பொறியலாளர் அலுவலகத்தின் பதில் நீர்ப்பாசன பொறியியலாளர் த.கணேசராசா தலைமையில் 'நியாப்' பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வழங்கிவருகின்றனர்.

அத்துடன், தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வேலைகளை இந்தக்குழுவினர் மேற்பார்வை செய்தும் வருகின்றனர். (எ-றி)

### நாளை

புரட்டாதி 06
ஞாயிற்றுக்கிழமை
(22.09.2002)
திதி : பிரதமை
முன்னிரவு 9.46 வரை.
நட்சத்திரம்: உத்தரட்டாதி
முன்னிரவு: 8.46 வரை
மஹாளய பக்ஷாரம்பம்
சுபநேரம் : 9.02 - 10.32
ராகுகாலம் : 4.32 - 06.02
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கேட்பதன் மூலம் அறிவு வருகிறது; பேசுவதன் மூலம் விசனம் வருகிறது.

## மண்டைதீவு மீனவர் மீதான தாக்குதல்:

# கடற்படையினர் வராததால் விசாரணை நடைபெறவில்லை

யாழ்ப்பாணம்,செப்.21

மண்டைதீவு, சின்னக்கடல் பகுதியில் மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்கு கடற்படையினர் சமுகமளிக்காத காரணத்தினால் விசாரணைகள் இடம்பெறவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இந்த விசாரணைகள் இடம்பெறவிருந்தன. ஆயினும், குறிப்பிட்ட கடற்படையினர் சமுகமளிக்கவில்லை. ஆனால், மீனவர்கள் சமுகமளித்திருந்தனர். கடற்படையினர் வராத காரணத்தினால் விசாரணைகள் இடம்பெறவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆணைக்குழுவின் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய பதில் கிடைத்ததும் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான 7 மீனவர்களும் விசாரணைக்குச் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-10-ரி)

# கைதடி வயோதிபர் மடத்துக்கு அம்புலன்ஸ் ஒன்று அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 'நிக்கொட்' எனப்படும் வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கைதடியிலுள்ள வயோதிபர் மடத்துக்கு அம்புலன்ஸ் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

மடத்திலுள்ள வயோதிபர்களை யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்வதற்கு வசதியாகவே இந்த அம்புலன்ஸ் வழங்கப்படவுள்ளது.

கடந்த பல வருடங்களாகக் கைதடியில் செயற்பட்டுவந்த இந்த வயோதிர் மடம் 2000ஆம் ஆண்டு குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையையடுத்து இடம்பெயர்ந்து மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் செயற்பட்டுவந்தது.

தற்பொழுது மீண்டும் கைதடியில் இது செயற்பட்டுவருகிறது. இங்கிருந்து வயோதிபர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து இந்த அம்புலன்ஸ் வழங்கப்படவுள்ளது.(ம-10)



பழையவீடுகள், தளபாடங்கள், மரவாகனங்கள், பித்தளைச் சாமன்கள் என்பன அரும் பொருட்கள். இவற்றை வர்த்தகப் பொருளாக்குபவர்கள் பற்றி விழிப்புடன் இருப்போம். இவற்றின் தொடர்ந்த இருப்பை உள்ளூரில் உறுதி செய்வோம்.

அரும்பொருட்களும் தொல்பொருட்களும் தேசத்தின் சொத்தும், அதன் வரலாற்றின் அடையாளமும் ஆகும். இவற்றை அழிப்பதும், இந்த மண்ணை விட்டு வெளியேற அனுமதிப்பதும், தேசவரலாற்றையும், இனஅடையாளத்தையும் அழிக்கும் செயலாகும்.

முதுசம் Vii, கலைவட்டம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# விடுதலைக் குரல்களை வீச்சாய் உரைத்த சிறப்புக் கலையரங்கம்

**அண்மையில் நடைபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் போது ஆலய மேற்கு வீதியில் 'புலிகளின் குரல்' நிறுவனத்தினர் நடத்திய சிறப்புக் கலையரங்கம் பற்றிய ஒரு விவரணத் தொகுப்பு இது.**

விக்கினங்கள் தீர்க்கவல்ல கந்தன் ஆலயச் சூழலில் திருவிழாக் காலத்தில் தியாக தீபம் அண்ணன் திலீபன் தன் உயிர்தனை ஈந்த அந்த நல்லூர் வீதியில் 'புலிகளின் குரல்' செய்த புதுமைகள் கண்டோம்.

வெவ்வினை தீர்த்திடும் வேலவன் வாசல் தேடிப் போனபோது, ஆலயச் சூழலில் அற்புதங்கள் பல கண்டோம். ஏழு (07) ஆண்டுகள் நாம் பட்ட இன்னல்களை அந்தக் கந்தன் அறிவான். யாழ்ப்பாண மக்களை விடுதலைக் கருத்தில் இருந்து திசைதிருப்ப ஸ்ரீ லங்கா அரசும், அரச முகவர்களும் தீவிரமாகச் செயற்பட்ட காலம் முடிந்துபோயினும் அந்த வாடை இன்னும் நீங்கவில்லை. இந்தச் சூழலில் குடாநாட்டின் பெரும்பாலான தமிழ் மக்கள் ஒன்றுகூடும் நல்லூர் ஆலயத் திருவிழாச் சூழலில் எம் தாயக் குஞ்சுகளைக் கண்டு கண்கலங்கி நின்றோம். விடுதலைப் போராட்ட புகைப்படங்கள் தந்த காட்சி எம் விறல் வேங்கைத் தலைவனின் படம் வரவேற்க உள்ளே நாம் கண்ட அதிசயங்கள் எம் உள்ளத்தில் விடுதலை உணர்வுகள் ஊற்றெடுத்துப்போயின. நிறைவோடு வெளியே வந்தோம் ஒளிப்படக் காட்சிகள் உணர்வுகள் பலவற்றை ஊட்டித் தந்தன. இவை மட்டுமல்ல படை கண்டு அஞ்சும் பாம்புகள் மத்தியில் படுத்திருந்தார் ஒரு பயமில்லா மனிதர். பார்த்தோம் உடல் வியர்த்தோம். பாழுங்கிணற்றில் பல வகைச் சத்தம், பார்ப்போம் என விரைவாய்ச் சென்றோம். மோட்டார் சைக்கிள் கிணற்றில் ஓடியது அதிசயம்தான்; அற்புதம்தான்.

தெற்கு வீதியில் அந்த அதிசயம் கண்டோம். அழகான அரங்கு ஒன்று பதாகையுடன் காட்சி தந்தது. 'மூத்த தளபதி கேணல் கிட்டு, லெப். கேணல் திலீபன் ஆகியோர் நினைவாகப் புலிகளின்குரல் நிறுவனம் நடத்தும் சிறப்புக் கலையரங்கம் மாலை 6.30 மணி என அழகாய் காட்சி தந்தது. அப்போது நேரம் 6.00 மணி, - இன்னும் அரை மணித் துளிகள் இருந்தன. அரங்கின் முன்னே

## புலிகளின் குரல் புதுமைகள் கண்டோம்

அமர்ந்தோம் ஆவலுடன். விடுதலைப் பாடல் ஒன்று எம் செவிப்பறையை அதிர்த்தது - உணர்வுகள் கொப்பளிக்க உற்சாகமாய் இருந்தோம். ஏராளமாய் மக்கள் அங்கு கூடினர். நேரம் 6.30 அரங்கம் ஒளிர்ந்தது. அறிவிப்பு நடந்தது. முதலாம் நாள் நிகழ்வுகள் மூச்சாய் எழுந்தன. விடுதலைக்கு வித்திட்ட வீரமறவரின் நினைவோடு விரிந்தது. முதல் நிகழ்வு பல்கலை மாணவி மதுரா வரதராஜன் தன் மதுரக் குரலாலே மயக்கினார் மனங்களை. மதுராவின் குரலில் மனம் நிறையத் தொடர்ந்தது சாந்தனின் கச்சேரி. தமிழீழப் பாடகன், உலகறிந்த பாடகர், 'கிண்கிணிநாதன்' எஸ்.ஜி. சாந்தன் தன் மைந்தன் இசையரசனோடு தந்த பாடல்கள் அனைத்தும் இதமாய் இனித்தன.




அன்றைய நிகழ்வுகள் இனிதாய் நிறைவுற அடுத்த நாள் நிகழ்வுக்கு எப்போ விடியும் என வீடேகினோம்.

அடுத்த நாள் வந்தது. மாலையும் ஆனது 6.30 அரங்கம் ஒளிர்ந்தது. 2ஆம் நாள் நிகழ்வுகள் இனிதே நடந்தன. சிம்மக்குரலோன் சிவசத்தி மோகன் பாடினார். சபை அமைதியாய் ரசித்தது. பின்பு வந்தது சுகுமாரின் கச்சேரி. தமிழீழப் பாடகர், சுந்தரத் தமிழோன் சுகுமார் தன் அண்ணனின் மகன் வசீகரனோடு தந்தார் பாடல்கள். அனைத்தும் அற்புதமாய் ஆனது. தவற விடுவதில்லை இந்நிகழ்சிகளை என்ற உறுதியோடு அடுத்த நாள் நிகழ்வுக்காய் காத்திருந்தோம்.

3ஆம் நாள் மாலை 6.30 அரங்கம் ஒளிர்ந்தது.

வேஙகுழல் வேந்தன் வசந்தனின் வேணுகான இசை எமையெல்லாம் சிலிர்க்க வைத்தது. பின்னணிக் கலைஞர்கள் அற்புதம் செய்தனர். தொடர்ந்து வந்தது முல்லைச் சகோதரிகளின் பாடல் அன்றைய குரல் அப்படியே இருந்தது அதிசயந்தான்.

நிகழ்வுகள் நிறைவுற அடுத்த நாள் நிகழ்வுக்காய்க் காத்திருந்தோம். மாலை 6.30 - நிகழ்வு அரங்கம் ஒளிரவில்லை. ஏனோ என் மனம் படபடத்தது. ஆம்! கந்தனின் வீதியுலா அன்று தாமதமானது. 7.00 மணி அரங்கம் ஒளிர்ந்தது. 6.30 ஏழாய் ஆனதற்கு மன்னிப்பு என்றார் அரங்கில் நின்றவர். தொடர்ந்து நிகழ்வு புலிகளின் குரலின் புதுமைக் கவிஞர் பொன் காந்தனின் அடுக்கு வரிகள் தலைமையை நிறைத்தது. ஆற அமர்ந்திருந்து ஆயிரம் மனந்திறந்து நால்வர் பேசினர். தலைப்பு இது தான், தரமாய் இருந்தது. தவிப்பு சிலருக்கு சாடல் அதிகமென்று. சரிதான்! நடந்ததைத்தானே தந்தனர் அவர்கள். தொடர்ந்தது சங்கநாதம், புதுமைகள் செய்திடும் பேபி ஆசிரியை எனக் கேள்விப்பட்டிருந்தோம் அன்று தான் கண்டோம் அவரின் நெறியாள்கை. விடுதலைப் பாடல்களுக்கு வீச்சும் தந்தனர் விடுதலைக் கவிஞர்கள் நன்று. அன்றைய நிகழ்வு அத்துடன் நிறைவுற இறுதி நாள் நிகழ்வுக்காய்த் தவிப்போடு காத்திருந்தோம். காலை விடிந்தது. மாலையும் ஆனது. அரங்கின் முன்பு நாம் ஆவலோடு காத்திருந்தோம். ஆயினும், நெஞ்சினில் வேதனை நெருப்பாய்க் கொதித்தது. இன்றுடன் முடியுதே தொடராதா என - இறுதி நிகழ்வுகளுக்காய் அரங்கம் ஒளிர்ந்தது. கைகொடுத்த கந்தனின் கதை மூலம் சமூகத்தை விழிப்படைய வைத்தார் மனோகரி சிவராமன். தொடர்ந்து வந்தது இன்னிசை கானங்கள் மண்ணின் மைந் தர்கள் விடுதலை உயிரூட்டிகள். போராளி இசையமைப்பாளர்






கள் இசைப்பிரியன், செயல்வீரன் இசை நெறியாள்கையில் விடுதலைக் கீதங்கள் வீச்சாய் உரைத்தன. தமிழீழப் பாடகர் அநேகர் வந்தனர். விடுதலைக் குரல்களை எம் முன்னே வீசியே எறிந்தனர். வர்ண விளக்குகள் ஒளிர, முன் இசை ஒலிக்கவே பார்ப்பவர் மனங்களில் பரவசம் எழுந்தது. இன்றும் எம் காதில் அது ஒலிக்கிறது. பொய்யல்ல நிஜம்தான். புலிகளின் தாகம் பாடல் ஒலித்திட மகிழ்ச்சி பொங்கி எழுந்ததை மக்கள் மனங்களில் கண்டோம். எம் கண்களில் கண்ணீர் கசிந்தது.

ஐந்து நாள் நிகழ்வுகள் அருமையாய் அமைந்திட ஒலி,ஒளி அற்புதம். அனைவரின் சார்பிலே அவர்களுக்கெம் நன்றிகள்.

விடுதலைக் காற்றினை நல்லூரான் வீதியில் வீசிடச் செய்திட்ட விறல் வேங்கைத் தலைவனின் விடுதலைக் குரலே! புலிகளின் குரலே! நின்புகழ் என்றென்றும் வாழி! விரைவினில் வானலை எம்மோடு சங்கமி! அதற்காய் நாம் ஆவலோடு காத்திருக்கிறோம்.

- பரணி

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டமை சட்டபூர்வமானதா?

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புமீது அவசரகாலச் சட்டத்தின்கீழ் முதலில் தடைவிதிக்கப்பட்டது. அவசரகாலச் சட்டம் காலாவதியானதைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஜனாதிபதி சந்திரிகா தடைவிதித்தார். இருப்பினும், அந்தத் தடை பாதுகாப்பு அமைச்சின் கையொப்பத்துடன்கூடிய வர்த்தமானி அறிவித்தலின்மூலம் நீக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை சட்டபூர்வமானதா என்பது குறித்து எம். எஸ். எம். அயுப் எழுதி 'லக்பிம' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

சுமார் நாலரை ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் அமைப்புமீது விதிக்கப்பட்டிருந்த தடை கடந்த 4ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் நீக்கப்பட்டுள்ளது.

1998 ஜனவரி 26ஆம் திகதி நள்ளிரவு அரசு, விடுதலைப் புலிகள் அமைப்புமீது தடைவிதிக்க முன்னர் இருந்த நிலைமையே இப்போது நிலவுகிறது. இது ஒரு புதுமையான நிலைமையேயாகும். விடுதலைப் புலிகளின் அரசியல் நோக்கங்களுக்குத் தடை, அந்த அமைப்பிடம் ஆயுதங்கள் இருப்பது சட்டவிரோதமானது. இருப்பினும், அந்த அமைப்பு தற்போது சட்டவிரோதமான அமைப்பு அல்ல.

1998 ஜனவரி 26ஆம் திகதிக்கு முன்னர் அதாவது அந்த அமைப்பு மீது தடைவிதிக்கப்படுவதற்கு முன்னர் அந்த அமைப்பினரால் இந்நாட்டின் ஜனாதிபதி கொல்லப்பட்டார். கடற்படைத் தளபதி கொல்லப்பட்டார். இருப்பினும், விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பாகக் கருதப்படவில்லை.

1998 ஜனவரி 25ஆம் திகதி கண்டியில் தலதா மாளிகைக்கு அருகே விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னரே விடுதலைப் புலிகள் அமைப்புமீது தடைவிதிக்கப்பட்டது.

தலதா மாளிகையைப் பாதுகாக்க முடியாத அரசின் கையாலாகாத்தனம் குறித்து மக்கள் கொண்டிருந்த அதிருப்தியைப் போக்கி அவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கிலேயே அப்போது ஆட்சியில் இருந்த பொ.ஐ. முன்னணி அரசு விடுதலைப் புலிகள் அமைப்புமீது தடைவிதித்தது.

கழுதையின் முதுகில் பாரம் சுமத்தப்பட்டது. ஒரு வைக்கோல் கட்டைக் கூட ஏற்றமுடியாத அளவுக்குப் பாரம். அவ்வேளையில் ஒரு வைக்கோல் கட்டும் ஏற்றப்படவே கழுதையின் இடுப்பு முறிந்தது. எனவே, கழுதையின் இடுப்பு முறிந்ததற்குக் காரணம் அந்த வைக்கோல் கட்டு எனக் கூறமுடியுமா?

அன்று அதிகாரத்திலிருந்த பொ.ஐ.முன்னணி அரசுக்கு இவ்வாறுதான் வாதிடமுடிந்தது. விடுதலைப் புலிகள் அதுவரை மேற்கொண்ட குற்றங்களுடன் தலதா மாளிகைச் சம்பவமும் சேரும்போது அந்த அமைப்பைத் தடைசெய்யவேண்டிய தேவை ஏற்பட்டது என பொ.ஐ.முன்னணியினர் வாதிடலாம்.

இருப்பினும், மக்களின் அதிருப்தியில் இருந்து தப்புவதற்காக விடுதலைப் புலிகள் அமைப்புமீது தடைவிதிக்கப்படவில்லை எனக் கூறமுற்பட்டால் தலதா மாளிகை மீது தாக்குதல்களை மேற்கொண்ட விடுதலைப் புலிகளுக்கு எதிராக பொ.ஐ.முன்னணி அரசு எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என மறுபுறத்தில் குற்றச்சாட்டுகளை மேற்கொள்ள வாய்ப்புகள் உள்ளன. எனவே, பொ.ஐ.முன்னணி அரசு மக்களின் அதிருப்தியில் இருந்து தப்புவதற்காகவே விடுதலைப் புலிகள் அமைப்புமீது தடைவிதித்தது என ஏனையோர் கூறும்போது பொ.ஐ.முன்னணியினர் அமைதி பேணினர்.

சட்டரீதியாகப் பார்க்கும்போது கடந்த 4ஆம் திகதி நீக்கப்பட்டது 1998இல் விதிக்கப்பட்ட தடை அல்ல. 1998இல் விதிக்கப்பட்ட தடையானது கடந்த வருடம் அவசரகாலச் சட்டம் செயலிழந்ததோடு அதுவும் செயலிழந்துவிட்டது.

**தமிழில்: கஜனி**

கடந்த வருடம் ஜூன் 20ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அமைச்சரவையிலிருந்து முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ரவூப் ஹக்கீமை வெளியேற்றினார். அதைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11 பேரில் 7 பேர் எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து பொ.ஐ. முன்னணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தது. ஜே.வி.பி. யினரின் 2ஆவது கிளர்ச்சியை அடக்குவதற்கு 1990 ஜூன் 20ஆம் திகதி ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவால் கொண்டுவரப்பட்டதும் பின்னர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களையடுத்து மாதாமாதம் தொடர்ந்து நீடிக்கப்பட்டுவந்ததுமான அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்க முடியாத நிலைமை உருவானது.

இதன்படி கடந்த வருடம் ஜூலை மாதம் 3ஆம் திகதி நள்ளிரவுடன் அவசரகாலச் சட்டம் காலாவதியாகி விடுதலைப் புலிகள்மீது விதிக்கப்பட்ட தடையும் தானாகவே செயலிழக்கும் நிலை உருவானது.

அதுவரை அவசரகாலச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மீதான தடையை அவசரகாலச்சட்டம் காலாவதியானதைத் தொடர்ந்து 2001 ஜூலை 4ஆம் திகதியிலிருந்து ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் மீதான தடையைக் கொண்டு வந்தார்.

அன்று அவசரகாலச் சட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனக் கூறிய ஐ.தே.கட்சி அவசரகாலச் சட்டம் காலாவதியாவதுடன் விடுதலைப் புலிகள் மீதான தடையும் காலாவதியாகவுள்ளது என்பதை அவ்வளவு முக்கியமாகக் கருதவில்லை. அதே போலப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படவேண்டும் என 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் பொதுத் தேர்தலின்போது கூக்குரலிட்ட ஜே.வி.பி. யினர் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத அந்தச் சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் அமைப்புத் தடை

(07ஆம் பக்கம் பார்க்க)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக தங்கள் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளை கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு பிரதேசத்தில் உள்ள அனைத்துத் திணைக்களத் தலைவர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

விவசாயம், கால்நடை அபிவிருத்தி, தென்னை அபிவிருத்தி, மீளக்குடியமர்தல், சுகாதாரம், கல்வி, உள்ளூராட்சி, சூழல் பாதுகாப்பு, வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மின்சாரம், வீடமைப்பு, கிராமிய அபிவிருத்தி, சிறுகைத்தொழில், கூட்டுறவு, கடற்றொழில், போக்குவரத்து, கலால், பனை அபிவிருத்தி, சிறுவர் பாதுகாப்பு, வணிகர் மன்றம், வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ம-117)

# பஸ்சேவை இல்லாதது குறித்து மண்டைதீவு மக்கள் விசனம்

மண்டைதீவில் மீளக்குடியமர்ந்த மக்களின் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, வடபிரதேசப் போக்குவரத்துச் சபையினரும் மண்டைதீவுக் கடற்படைத் தளத்தின் கட்டளையதிகாரியும் பஸ் சேவை ஒன்றை ஏற்பாடு செய்வதாக அண்மையில் உறுதியளித்திருந்தனர். ஆனால், உறுதி வழங்கிப் பல வாரங்களாகியும் மண்டைதீவுக் கிராமத்திற்கு பஸ்சேவை நடத்தப்படாததையிட்டு இப்பகுதிப் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள பொதுமக்களும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் கடற்படை மற்றும் போக்குவரத்துச் சபை என்பவற்றுக்கு பல விண்ணப்பங்களையும் கோரிக்கைகளையும் விடுத்ததுடன் நேரடியாகச் சென்று சந்தித்ததன் பயனாகவே நம்பிக்கைதரும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

பஸ்சேவை நடத்துவதற்கான வீதியைப் பார்வையிடுவதற்காக அண்மையில் போக்குவரத்துச் சபையினர் 'பஸ்' வண்டி ஒன்றில் இங்கு வந்திருந்தனர். முன்னைய 'பஸ்' தரிப்பிடத்தில ஒன்றுகூடிய பொதுமக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள், வீதியில் வளர்ந்திருந்த மரங்களின் கிளைகள், கொப்புகளை அகற்றுமாறு கேட்டுக்கொண்டதற்கமைய - உடனடியாக இடைஞ்சலாக இருக்கக்கூடிய தடைகள் அகற்றப்பட்டன.

அப்படியிருந்தும் இன்றுவரை மண்டைதீவுப் பக்கமாக ஒரு 'பஸ்' வண்டியும் தலைகாட்டவில்லையென்று தினமும் கால் நடைப் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் அங்கலாய்க்கிறார்கள். (ம-ரி)

# ஒருகோடி ரூபா நஷ்டஈடு கேட்டு ரூபவாஹினிக்கு எதிராக வழக்கு

### கூட்டுறவுத்துறை அமைச்சர் தாக்கல் செய்தார்

கூட்டுறவு அமைச்சர் அப்துல் காதர் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திடம் ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கம்பளை ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகக் குழுவிலிருந்து அமைச்சர் அப்துல்காதரை விலக்கும்படி கம்பளை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் கண்டன சுலோகங்களுடன் காணப்பட்டார்கள் என்று ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் செய்தி ஒளிபரப்பியது. அதன்மூலம் தனது கௌரவத்திற்கும் அரசியல் பின்னணிக்கும் களங்கம் ஏற்பட்டிருக்கிறது என்று மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தம்மை நிர்வாகக் குழுவிலிருந்து விலக்கிவைப்பதற்கு எவ்வித போராட்டமும் இடம்பெறவில்லை என்றும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிபதி எல். எஸ்.அபேய குணவர்தன முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றபோது சமரச முயற்சியொன்றுக்காக வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிபதி. (ம)

# விடுதலைப் புலிகள்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டதைத் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டனர்.

கடந்த 4ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவால் நீக்கப்பட்டது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் அமைப்புமீது விதிக்கப்பட்ட தடையே யாகும்.

ஜனாதிபதியால் விதிக்கப்பட்ட தடையைப் பாதுகாப்பு அமைச்சரால் நீக்கமுடியுமா? எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இருப்பினும், இது வலுவான வினா அல்ல. ஏனெனில் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலேயே ஜனாதிபதி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்திருந்தார். புதிய அரசு பதவியேற்ற பின்னர் திலக் மாரப்பன பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றார். எனவே, ஒரு பாதுகாப்பு அமைச்சரால் விதிக்கப்பட்ட தடையை மற்றொரு பாதுகாப்பு அமைச்சர் நீக்கியுள்ளார். எனவே, ஜனாதிபதியால் விதிக்கப்பட்ட தடை என்ற விடயம் இங்கு எழவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பைப் போன்ற அமைப்புகளைத் தடைசெய்யும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சருக்கேயுள்ளது. கடந்த வருடம் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியே பணியாற்றினார். விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் வர்த்தமானி அறிவிப்பில் அவர் ஜனாதிபதி என்ற வகையிலே கையொப்பமிட்டிருந்தார். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக இருந்த காரணத்தாலேயே விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கு அவருக்கு அதிகாரம் இருந்தது.

விடுதலைப் புலிகள்மீது தடை விதிக்கப்பட்டிருந்ததால் அந்த அமைப்பின் நடவடிக்கைகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சர் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார். இது உண்மையே.

ஜனாதிபதியால் விடுதலைப் புலிகள் அமைப்புத் தடைசெய்யப்பட்டபின்னர் விடுதலைப் புலிகள் சுமார் 2ஆயிரம் படையினரைக் கொன்றொழித்து "ஜயசிகுறு" ராணுவ நடவடிக்கையைத் தோற்கடித்தனர். 1998 செப்ரெம்பர் 27ஆம் திகதி கிளிநொச்சி ராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

அதற்குச் சில நாள்களுக்குப் பின்னர் ஒட்டிசுட்டான், மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம் ஆகிய இடங்களில் அமைந்திருந்த ராணுவ முகாம்கள் ஓர் எடுப்பில் அழிக்கப்பட்டன. பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட பல் வேறு ராணுவ நடவடிக்கைகள்மூலமோ இந்த முகாம்கள் அமைக்கப்பட்டன.

அத்தனை தாக்குதல்களுக்கும் அதுவரை தாக்குப்பிடித்திருந்த ஆனையிறவு இராணுவமுகாமை 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி தாக்கி அழித்துள்ளனர். அந்த நேரத்தில் அதிகாரிகளும் படையினருமாக 11 ஆயிரம்பேர் ஆனையிறவு முகாமில் நிலைகொண்டிருந்தனர் எனக் கூறப்பட்டது.

அதன்பின்னர், விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டு யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறினர். விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடியாமற்போனதற்குக் காரணம் இந்திய அரசின் அச்சுறுத்தலே என முன்னாள் ராணுவத் தளபதி 'லக்பிம' வார இதழுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

இவற்றிலிருந்து விடுதலைப் புலிகளின் படை நடவடிக்கைகளை அவர்கள்மீது விதிக்கப்பட்ட தடை எதுவிதத்திலும் பாதிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இந்தத் தடை விதிக்கப்பட்ட வேளையிலும் நீக்கப்பட்டவேளையிலும் வடக்கிலும் தெற்கிலும் மக்கள் மனதில் வேறுபட்ட உணர்வுகள் எழுந்தது உண்மையே. இந்த விடயம் உண்மையில் ஒருசர்ச்சைக்குரியதாகும். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இது அவர்களது ஆத்ம கௌரவப் பிரச்சினை. விடுதலைப் புலிகள்மீது தடைவிதிக்கப்பட்டபோது தென்பகுதி மக்கள் திருப்தியடைந்தனர். ஆனால், அந்தத் தடை நீக்கப்பட்டபோது அதைவிடப் பல மடங்கு கவலையடைந்தனர்.

தடைநீக்கப்பட்டதானது தமக்குக் கிடைத்த வெற்றி என விடுதலைப் புலிகள் கருதுகின்றனர். தெற்கிலுள்ள விடுதலைப் புலிகளை எதிர்ப்பவர்களுக்கு இது பொறுக்கமுடியாத விடயம்.

எனவே, தடைவிதிக்கப்பட்டதும், தடைநீக்கப்பட்டதும் தமிழ்மக்களுக்கும் சிங்களமக்களுக்கும் எதிர்மாறான உணர்வுகளை அளித்துள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் - அவ்வாறு இல்லையேல் சட்டவிரோத அமைப்பு ஒன்றுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுக்கள் சட்ட விரோதமானவையாகவே அமையும் எனச் சிலர் வாதிடுகின்றனர்.

இது ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல. அவர்களது வாதம் சரி எனில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் கைச்சாத்திட்டு கடந்த பெப்ரவரி 24ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் புரிந்துணர்வு உடன்பாடும் சட்டபூர்வமானதாக அமையாது. எது எவ்வாறாயினும், தற்போது புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுவிட்டது. ★


## NORLAND ANGLO ALMAMAER

நடத்தும்

ஆங்கிலப் பேச்சு பயிற்சி வகுப்புகள்

Spoken English Class with ANGLO Style

Spoken Demonstrate and Grammar

23.09.2002

காலை 10 மணி, மாலை 4 மணி வகுப்புகள்

*By:*

**Dr.V.P.SUNDARARAJA** *(M.ED.ALt.)*

நியூட்டன் உயர் கல்வி நிலையம்

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (8516)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



ஆண்டவன் படைப்பு 19 - 01 - 1947

ஆண்டவன் அழைப்பு 21 - 08 - 2002

### அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம்


*(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)*

எமது குடும்பத் தலைவர் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நேரில்வந்து ஆறுதல் கூறியோருக்கும், முன்னின்று உதவி புரிந்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், வேறு வகையில் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது இதயங் கலந்த நன்றியுணர்வைத் தெரிவித்துக்கொள்வதோடு, எமது இல்லத்தில் *இன்று (21-09-2002) சனிக்கிழமை* நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிரியை நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சீ.சீ.த.க.பாடசாலை ஒழுங்கை,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

**மனைவி, மக்கள்.** (8523)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 20 - 02 - 1934

உதிர்வு 22 - 08 - 2002

### திருமதி கண்மணி சபாரத்தினம் (தங்கம்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை - தமிழ் கந்தையா வித்தியாலயம்)

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
எமக்கு வளமான வாழ்வளித்த
எமது அன்புத் தெய்வமே!

*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு *இன்று (21.09.2002) சனிக்கிழமை முற்பகல்* அவரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சுன்னாகம் மேற்கு,*
*சுன்னாகம்.* (8528)

**- குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 05 - 1932

மறைவு 02 - 10 - 2001

### அமரர் தம்பையா தியாகராஜா

*(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)*

திதி: 21.09.2002

குடும்பத்தின் குலவிளக்காய், பாசத்தின் உறைவிடமாய் நின்று எங்கள் வாழ்வை எழிலாக்க உழைத்து எம்மைக் குறைவறக் காத்து வழிநடத்திய அன்புத் தெய்வமே! நீங்கள் தெய்வமாகி ஓராண்டு ஆகிவிட்டாலும், என்றென்றும் எங்கள் இதயத்தை விட்டகலாத அன்புத் தெய்வத்தின் *ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*ராஜ வீதி,*
*ஆவரங்கால் மேற்கு.* (8367)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி புஸ்பராணி

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் 12/25, கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி புஸ்பராணி 17.09.2002இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்துரை - முத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னத்துரை கந்தசாமியின் பாசமிகு மனைவியும் இராஜசேகர் (பிரான்ஸ்), கருணாகரன் (பிரான்ஸ்), ரவீந்திரன் (கனடா), சுவாரகன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரமணி, சங்கர் (கொழும்பு), புவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தி (பிரான்ஸ்), மேரி (பிரான்ஸ்), நாளினி (கனடா), கௌரி (பிரான்ஸ்), ஜெயக்குமார் (கனடா), கவிதா (கொழும்பு), கோணேஸ்வரமூர்த்தி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் நாகரத்தினம், விஜயதேவி, வசுந்தராதேவி, வசந்தகுமார் (கிளி மாமா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நவரட்ணம், நடராசா (உதவித் தேர்தல் ஆணையாளர், யாழ்.மாவட்டம்), விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிஷாந்தன், கிருஸ்ணிகா, இந்திரா, றொஷான், ரமணி, கண்ணன், உமேஷ்காந், ரமணன், பாலரமணி, அசோக், திவ்யா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2002) ஞாயிற்றுக்கிழமை முப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இ.எஸ்/கே.யுவல்லறி,*
*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (8512)

தகவல்:
இ.சி.கந்தசாமி
(கணவர்).

உ
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை

# இணுவில் அருள்மிகு ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில்

## பிரதமகுரு 'வேதாகம ஞானசாகரம்', 'சிவாகம கிரியா கலாமணி'

## பிரம்மஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள் – ஸ்ரீமதி ரஞ்சிதமணி அம்மா

## தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி



# மணிவிழா சிறப்பு மலர் 21-09-2002





### தம்பதிகள் நீடு வாழி!

அருச்சனைகள் ஆராதனை அபிஷேகங்கள்
அழகொழு மஹோற்சவங்கள் க்ரஹ சாந்தி
திருப்பொலிவும் மங்கள வைப வங்கள்
திகழ்ந்திடவே இணுவையூர் கொழிக்கச் செய்யும்
குருக்களவர் சோமாஸ்கந்த ஐயா செய்த
கும்பாபிஷேகங்கள் பக்தி பொங்கும்
பெருத்ததல இணுவையூர்ப் பிள்ளை யாரின்
பேரருளால் தம்பதிகள் நீடு வாழி!

*ஆக்கம் - மஹாவித்துவான்.*

*மலர் ஆக்கம்:*
விநாயக அடியார்கள்,
மணிவிழாச் சபை,
ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார்
திருக்கோயில்

### வாழ்க்கைக் குறிப்புகள்

பிறந்ததிகதி : 21.09.1942
தந்தை பெயர் : வைத்தீஸ்வரக்குருக்கள்
தாய் பெயர் : *சாரதாம்பாள்*
பிறந்தஇடம் : இணுவில்
ஆரம்பக்கல்வி : இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை (இணுவில் இந்துக் கல்லூரி), திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி (யாழ்.பல்கலைக்கழகம்)
சமஸ்கிருத கல்வி : கோப்பாய் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள், சீதாராம சாஸ்திரிகள், சுப்பிரமணிய சாஸ்திரிகள்
திருமணம் : நடராஜக்குருக்கள் புத்திரி ரஞ்சிதமணி (1968)
ஆச்சாரிய அபிஷேகம் : 1976
தீட்சாகுரு : சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக்குருக்கள்
கும்பாபிஷேகம் செய்த ஆலயங்கள் : இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் பஞ்சமுகவிநாயகர்.
இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயம்
இணுவில் மஞ்சத்தடி விநாயகர் ஆலயம்
இணுவில் மாணிக்க வைரவர் கோயில்
இணுவில் நரசிம்ம வைரவர் கோயில்
இணுவில் கௌரி அம்பாள்
இணுவில் நடுவீராத்தி ஞானவைரவர் ஆலயம்
சண்டிலிப்பாய் ஆலங்குளாய் முருகமூர்த்தி கோயில்
1984 ஆம் ஆண்டு 25 குண்ட கும்பாபிஷேகம்
1997 ஆம் ஆண்டு 33 குண்ட கும்பாபிஷேகம்
தலாவாக்கொல்லை மாரியம்மன் கோயில் மஹோற்சவங்கள்
குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயம்,
இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயம்
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோயில்
டென்மார்க் கேணி சித்திவிநாயகர் ஆலயம்
மேலும் தமது குலதெய்வமான பரராஜசேகரப் பிள்ளையாருக்கு பல வருடம்

*மேலும் தமது குல தெய்வமாகிய பரராஜசேகரப் பிள்ளையாரின் திருப்பாதங்களினை தினமும் வேளை தவறாது பூசித்தமையும், முன் செய்த நல்வினை பேறாக நேற்றையதினம் இவரது ஜென்ம நட்சத்திரமாகிய திருவோண நட்சத்திரத்தில் தமது ஷஷ்டியப்த பூர்த்தியினை நட்சத்திர ஞாபகார்த்தமாக இந்தியா தமிழ்நாடு கபாலீஸ்வர தேவஸ்தான வேதவிற்பன்னர் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளால் சாந்தி வைபவம் இனிது நடைபெற்றது.*

## ஆகம நெறிமுறை தவறாத ஆசாரசீலர்

**தோற்றம் :** ஒருமைக்குத் தான் கற்றகல்வி என்ற வள்ளுவன் வாக்கிற் கேற்ப சீரூத்த பதியாம் இணுவையூரின் கண்ணே சித்தாந்த நாலாம் "சிவஞானசித்தியார் சுபக்க உரை ஆசிரியரும் ஜோதிட வைத்திய மாந்திரீக விற்பன்னரும் சைவ சித்தாந்த பண்டிதருமாகிய நடராஜ ஐயரின் மகள்வழிப்பேரனான சங்கீத வித்வானும் சிறந்த கதாப்பிரசங்கியுமான வைத்தீஸ்வரக்குருக்களுக்கும் மகள்வழிப் பேர்த்தியான சாரதாம்பாளுக்கும் மூன்றாவது மகவாக 21.09.1942அம் ஆண்டு (சித்திரபானு வருடம்) பூவுலகில் தோன்றினார்.

**கல்வி:** ஆரம்பக் கல்வியை இவர் இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலையில் (இணுவில் இந்துக் கல்லூரி) பயின்றார். பின் யாழ்.பரமேஸ்வராக் கல்லூரியில் (யாழ்.பல்கலைக்கழகம்) தொடர்ந்தார். பின்னர் லண்டன் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பில் க.பொ.த. உயர்தரம், சமஸ்கிருதம், பாளி, தமிழ் ஆகியன கற்றுத் தேர்ந்தார். 1953அம் ஆண்டு கோப்பாய் ஸ்ரீநிவாச சாஸ்திரிகளால் உபநயனம் நடத்தப்பட்டு ஆரம்ப சமஸ்கிருத கல்வியைக் கற்றார். சீதாராம சாஸ்திரிகளிடமும் சுப்பிரமணிய சாஸ்திரிகளிடமும் சமஸ்கிருத இலக்கண இலக்கியங்களை துறைபோகக் கற்றார்.

1968அம் ஆண்டு இணுவில் கந்தசுவாமி கோயில் பரம்பரைப் பூசகருமாகிய சிவஸ்ரீ நடராஜக்குருக்களின் புத்திரி ஆகிய ரஞ்சிதமணியை மணமுடித்தார். சிவஸ்ரீ அரவிந்தக் குருக்கள், அபிராமி, சிவகாமி, பிரசன்னசர்மா, சுபநேமி ஆகிய பிள்ளைச் செல்வங்களையும் விசாகன், ஹேமமாலினி, துஸ்யந்தன் ஆகிய மருமக்களையும் சுபாங்கன், ஆராதனா, சாரங்கன், ஆர்த்திகன், தேவகா ஆகிய பேரப்பிள்ளைகளையும் பெற்றார். -

முதன்முதல் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் பஞ்சமுக விநாயகர் உருவாக்கம் சோமசுந்தர பத்தரோடு இணைந்து அரும்பாடு பட்டார். இவ்வாறு உருவாக்கிய விநாயகருக்கு தானே கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்ற அவாவினால் 1976அம் ஆண்டு நயினை பிரதிஷ்டா பூஷணம் இ.கைலாசநாதக் குருக்களால் ஆச்சாரிய அபிஷேகம் செய்யப்பட்டு ஈசான சிவாச்சாரியார் என்ற தீட்சாநாமத்தைப் பெற்று இவர்தம் பெரிய தந்தையார் சிவஸ்ரீ சதாசிவக் குருக்களால் வழிபடப்பட்டுவந்த சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரரை ஆத்மார்த்தமாக பூசை செய்து, 1977அம் ஆண்டு தைமாதம் பஞ்சமுக விநாயகருக்கு நவகுண்டம் அமைத்து, நவகுண்ட ஸ்பரிசாகுதி செய்து மஹாகும்பாபிஷேகம் செய்தார்.

இவர்தம் குருநாதராகிய கைலாசநாதக் குருக்களுடன் இணைந்து புங்குடுதீவு சிவன்கோயிலில் 33குண்ட கும்பாபிஷேகத்திலும் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களோடு இணைந்து புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோயில் 33 குண்ட கும்பாபிஷேகம், நாட்டின் தலைசிறந்த சிவாச்சாரியார்களுடன் இணைந்து இலங்கையின் எல்லாப் பாகங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகங்களிலும் பங்கு பற்றினார்.

**குருத்துவச் சிறப்பு!** 1984அம் ஆண்டு 25 குண்ட கும்பாபிஷேகத்தினை சத்யோஜாத சிவாச்சாரியாரின் பிரதிஷ்டா காரிகை - காமிகாமத்தை - முற்றுமுழுமையாக சகலகிரியைகளையும் செய்து மண்டலாபிஷேகபூர்த்தியை 3குண்டங்கள் அமைத்து திரிகண்ட ஸ்பரிஸாகுதி செய்து 1997இல் நிறைவேற்றியமை.

33 குண்டங்கள் அமைத்து கும்பாபிஷேகம் செய்து மண்டலபூர்த்தியை தீர்தாகமத்தில் கூறப்பட்டவாறு 10000 சங்குகள் கொண்டு அபிஷேகம் செய்தமை. மேலும் 1008 கலசாபிஷேகத்திற்கு ஒவ்வொரு கும்பத்திற்குமான பூஜையை நைவேத்திய சமர்ப்பணத்துடன் விஸ்தார பூஜை செய்தமை இவையாவும் தமது குலதெய்வமாகிய ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையாருக்கே செய்தார்.

**கோயில்பணி:** "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற நல்வாக்கின்படி ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாருக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம் செய்யும் பெரும் பேற்றைப் பெற்றது மட்டுமல்லாது கோயில் வளர்ச்சியில் அரும்பாடுபட்டார். பெருமானின் கோயிலினை அணிசெய்யும் தூண்கள் சிற்ப வேலைப்பாடு பொருந்தியதாகப் பார்ப்போரைப் பிரமிக்கவைப்பதுடன் பல்லவ மன்னர்களின் பலகை அமைப்பு, பொதிகை அமைப்பு என்பன புகுத்தப்பட்ட தூண்கள் அமைந்தமையும் பிரமாண்டமான அழகிய வேலைப்பாட்டுடன்கூடிய வசந்த மண்டபம் அதுவும் சந்தர்ப்பத்திற்கேற்ப உருமாறக்கூடிய வகையில் அமைக்கப்பெற்றதும், ஸ்தம்ப மண்டபத்தை சுற்றி உலோகம் பாவித்து வேலி போட்டமையும், உள்பிரகார வீதியிலே மேற் சீரிதானத்தில் வர்ணவேலைப் பாட்டுடன் கூடிய ஓவியங்கள், உள்வீதியில் விநாயகப் பெருமானின் புராண கதை மரபுகளை சித்திரிக்கும் ஓவிய உருவாக்கத்திலும் உதவி புரிந்தமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அத்தோடு பல்லவ மன்னர் காலத்து பஞ்சபாண்டவர் தங்களில் ஒன்றோ என எண்ணக்கூடிய அளவிற்கு அமைந்த தீர்த்தவாரி மண்டபமும், அழகிய இளைப்பாறு மண்டபமும் அந்த மன்னர்களை, அவர்கள் செய்த பணிகளை இன்று நம்கண்முன் நிறுத்துகின்றது. அவ்வகையிலே இவரின் இத்தகைய தொண்டுகள் மூலமாக கோயில் கண்ட குருக்கள் என்றே கூறமுடியும்.

*தொகுப்பு: சிவஸ்ரீ சோ.அரவிந்தக் குருக்கள்,*
சோ.பிரசன்னா சர்மா.

*இடம்* : ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் கல்யாண மண்டபம்
*காலம்* : இன்று (21.09.2002) சனிக்கிழமை மாலை 4.00 மணி
*தலைவர்* : திரு.சு.கணேசலிங்கம் *(ஆசிரிய ஆலோசகர்)*
*(வலிகாமம் கல்விக் கோட்டம், மருதனார்மடம்)*

### நிகழ்ச்சி நிரல்

01. *தேவாரம்* : திருநெறிய தமிழ் மறைக்கழக மாணவிகள்
02. *மங்கள விளக்கேற்றல்* :
03. *மங்கள இசை* : இணுவையூர் நாதஸ்வர, தவில் இசைக் கலைஞர்கள்
04. *வரவேற்புரை* : திரு.ச.முகுந்தன் *(ஆசிரியர்)*
05. *தலைமையுரை* :
06. ஆசியுரை : சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள் *(சர்வதேச இந்துமத குருபீடாதிபதி)*
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் *(நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)*
சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் *(காயத்திரி பீடம், இணுவில்)*
அருட்கவி திரு.சீ.விநாசித்தம்பி *(தலைவர், இந்துசமயப் பேரவை)*
சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள் *(பிரதமகுரு, இணுவில் கந்தசுவாமி கோயில்)*
சிவஸ்ரீ வை.பாஸ்கரக்குருக்கள் *(பிரதமகுரு, இணுவில் கந்தசுவாமி கோயில்)*
07. *வாழ்த்துப்பா* : பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்
08. *வாழ்த்துரை* : பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் *(கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)*
பேராசிரியர் சபா.ஜெயராசா *(தலைவர், நுண்கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*
பிரம்மஸ்ரீ எஸ்.கிருஷ்ணானந்த சர்மா *(விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
பண்டிதை திருமதி வை.கணேசபிள்ளை *(ஓய்வுபெற்ற ஆசிரியை)*
திரு.ச.முத்துலிங்கம் *(முன்னாள் கிராமசபைத் தலைவர்)*
திரு.க.தேவராஜா *(தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
திரு.செ.குபேரநாதன் *(அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி)*
திரு.ஆறு.திருமுருகன் *(ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)*
திரு.ந.ஸ்ரீமான் *(கிராம உத்தியோகத்தர்)*
09. நூல் வெளியீடு : சிவாகமங்களில் திருக்கோயில் (அமைவிட விளக்கம்)
10. விழா நாயகரைக் கௌரவித்தல்
11. விழா நாயகர் ஏற்புரை
12. நன்றியுரை : திரு.வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன்
13. தேவாரம்

குறிப்பு: விழா நாயகரும் துணைவியாரும் இணுவில் கந்தசுவாமி கோயில் தென்மேற்கு வீதியில் உள்ள அவர் பிறந்த இல்லத்திலிருந்து பி.ப.3.00 மணியளவில் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்படுவர்.

### மணிவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

01. இரா.அருட்செல்வம் (இணுவில்)
02. வே.சிவராஜா (சுதுமலை)
03. வே.லோகேஸ்வரன் (இணுவில்)
04. த.சிவேஸ்வரன் (இணுவில்)
05. தனுஜன். அழகுமாடம்
06. சீ.பாலசுப்பிரமணியம் (இணுவில்)
07. த.கிருபாமூர்த்தி (இணுவில்)
08. சு.இராமச்சந்திரன் (இணுவில்)
09. ந.திவாகரன் (இணுவில்)
10. இ.திருச்செல்வம் (இணுவில்)
11. நா.சுந்தரலிங்கம் (இணுவில்)
12. து.சிவகுமாரன் (இணுவில்)
13. த.கந்தசாமி (இணுவில்)
14. து.கிருஸ்ணசாமி (இணுவில்)
15. இ.பாலச்சந்திரன் (இணுவில்)
16. து.சின்னராசா (இணுவில்)
17. இணுவில் பொது நூலகம், சனசமூக நிலையம்

(C/23901)

பொது அமைப்புக்கள் கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர்

# நாவாந்துறை, கொட்டடி பகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற உதவுங்கள்

## இல்லையேல் போராட்டம் நடத்தவேண்டி வரும்

யாழ்ப்பாணம்,செப்.21

நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்கள் மத்தியில் தங்கியிருக்கும் இராணுவத்தினரை வெளியேற்ற உதவுங்கள். இல்லையேல் இராணுவத்தை வெளியேறக் கோரிப் போராட்டம் நடத்தும் நிலை ஏற்படும்.

- இவ்வாறு கண்காணிப்புக் குழுவிடம் கையளித்த மகஜரில் நாவாந்துறை - கொட்டடி பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி மக்களுடைய வீடுகளையும் அவர்களுடைய வாழ்விடங்களையும் விட்டு இராணுவம் வெளியேறவேண்டும். மக்கள் குடியிருப்புக்கள் மத்தியில் காணப்படும் இராணுவக் காவலரண்களும் அகற்றப்பட்டு மக்களிடையே இயல்பு வாழ்க்கை உருவாக்கப்படவேண்டும் என்பதும் இவ்வுடன்படிக்கையில் வாசகங்களாகும்.

ஆனால், நாவாந்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவம் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்தாமல் இன்னமும் உள்ளதனால் நாவாந்துறை கொட்டடி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

நாவாந்துறை கடற்கரையில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயம் போரினால் சேதமடைந்த நிலையிலுள்ளது. இந்த ஆலயத்தில் இராணுவக் காவலரண் அமைந்துள்ளதால் பக்தர்கள் இந்த ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்யமுடியாமலுள்ளது.

1995 இடப்பெயர்வின்போது வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று மீளவும் திரும்பி வந்த நாவாந்துறை சூரியவெளி குடியேற்றத்தில் வசித்த மக்களும் நாவாந்துறை அண்ணா சனசமூக நிலையத்தின் அருகிலுள்ள மக்களும் தமது முன்னைய இடங்களில் குடியேற இராணுவம் அனுமதிக்கவில்லை. அவர்களுடைய வீடுகளில் படையினர் நிலை கொண்டிருக்கின்றனர். இந்த மக்கள் முஸ்லிம்களின் சேதமடைந்த வீடுகளிலேயே தற்போது வசித்து வருகிறார்கள்.

அரசு - புலிகள் உடன்படிக்கையைத் தொடர்ந்து இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்கள் தமது இருப்பிடங்களில் குடியேறுவதற்கான ஆவலை வெளியிட்டுள்ளார்கள். அத்துடன், எதிர்வரும் மழைகாலத்தில் சேதமடைந்துள்ள இவ்வீடுகளில் குடியிருப்பதும் மிகவும் கஷ்டம்.

கண்ணாபுரம் குடியேற்றத் திட்டத்தில் வாழும் மக்களது குடியிருப்புக்களுக்கு மத்தியில் இராணுவம் நிலைகொண்டுள்ளதால் இப்பகுதி மக்கள் இங்குள்ள பொதுக் கிணறுகளைப் பயன்படுத்த முடியாமல் உள்ளனர். அவர்கள் அச்சத்துடனேயே தமது வாழ்நாளைக் கழித்துவருகிறார்கள்.

கண்ணாபுரம் தெற்குப் பகுதி மக்கள் தமது வீடுகளில் மீள்குடியமர்வதைத் தடைசெய்து இராணுவம் முட்கம்பி வேலி போட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் இருப்பிடம் இன்றி வாழ்ந்து வருகிறார்கள்.

எனவே, நாவாந்துறை, கொட்டடி மக்கள் குடியிருப்புக்களில் இருந்து படையினரை வெளியேற்றி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரிவர நடைமுறைப்படுத்த கண்காணிப்புக் குழு உதவி புரியவேண்டும் - என்றுள்ளது. (ம-51)

# பனை மீள்நடுகைக்கு விதைகள் சேகரிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.21

குடாநாட்டில் அழிக்கப்பட்ட பனைவளத்தைக் மீளக்கட்டியெழுப்பும் நோக்கத்துடன் பனை மீள்நடுகைக்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக பனம் விதைகள் சேகரிக்கப்படவுள்ளன.

பனை மீள் நடுகையை ஊக்குவிக்கும் முகமாக பனம் விதைகளைத் தந்து ஒத்துழைக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது தாயகத்தின் ஆதார சக்தியாக விளங்கும் பயன்தரு மரங்களில் ஒன்றான பனை மரங்களின் வளம் அழிக்கப்பட்டுள்ளது. அதை மீள உருவாக்கும் நோக்குடன் பனம் விதை நடும் வேலைத்திட்டத்தினை எமது மக்களின் ஒத்தாசையுடன் நடைமுறைப்படுத்துவதற்கு எமது நிறுவனம் முன்வந்துள்ளது. எதிர்வரும் சாதகமான காலநிலையைப் பயன்படுத்தி தமிழீழத்தின் பல பாகங்களிலும் இந்தத் தேசிய உற்பத்தி வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த மக்கள் அமைப்புக்களும் திடசங்கற்பம் பூண்டுள்ளன.

கடந்த கால யுத்தசூழ்நிலை காரணமாக அழிக்கப்பட்ட, அழிந்துபோன இந்த இயற்கைச் செல்வத்தை மீண்டும் கட்டிக்காத்து மேம்படுத்த வேண்டிய சமூகப் பொறுப்பு இன்று நம் எல்லோரையும் சார்ந்து நிற்கின்றது. இதனைக் கருத்திற்கொண்டு பெருமளவில் பனம் விதை நடுகையினை எமது மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளவுள்ளோம்.

இதற்கான பனம் விதைகளும் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. எனவே,பனம் விதை உற்பத்தியாளர்கள் உங்கள் பகுதிகளிலுள்ள பனை அபிவிருத்திச் சபை, கமநல சேவை நிலையம்,பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்புகொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம)

# ஆலயத்துக்குள் புகுந்து குதிரை வாகனம் திருட்டு

## சண்டிலிப்பாயில் சம்பவம்

வலி.தெற்கு,செப்.21

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க குதிரை வாகனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளது.

ஆலயத்தின் உட்புறத்தில் சேமியிலுக்குரிய யானை, புலி, குதிரை வாகனங்கள் வைக்கப்பட்டிருந்தன. குதிரை வாகனத்தின் பீடம் அப்படியே இருக்க குதிரை வாகனத்தை மட்டும் திருடர்கள் கழற்றி மதிற்சுவரால் கடத்திச் சென்றுள்ளனர்.

ஆலயத்தின் திருவிழாவில் வேட்டைத் திருவிழாவுக்கு இக்குதிரை வாகனமே பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்களவு தொடர்பாக மானிப்பாய் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-152)

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# மீட்கப்பட்ட உடைமைகள் வெய்யிலில் காய்கின்றன

## பாதுகாக்க நடவடிக்கை தேவை

தென்மராட்சி,செப்.21

சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் பெறுமதிமிக்க உடைமைகள் பல வெய்யிலில் கிடந்து பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை வைத்துப் பராமரிப்பதற்குத் தகுந்த இடவசதி இல்லாமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்ட நோயாளர் கட்டில்கள், அலுமாரிகள் மற்றும் தளபாடங்களே இவ்வாறு வெய்யிலில் கிடக்கின்றன.

இந்தப் பொருள்களைப் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படாவிடின் மழை காலத்தில் இவை மோசமாகச் சேதமடையும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இடிபாட்டுக்குள் மேலும் பல உடைமைகள் காணப்படுகின்றபோதிலும் பாதுகாக்க இடமின்மையால் அவை அப்படியே விடப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-117)

## செயலமர்வு

வலி.தெற்கு,செப்.21

சண்டிலிப்பாய், சங்கானை கல்விக்கோட்டங்களின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான சுகாதாரமும் உடற்கல்வியும் பற்றிய கருத்தரங்கும் செயலமர்வும் இன்று சனிக்கிழமை காலை மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்மூலவள நிலையத்தில் நடைபெறும். தரம் 6முதல் தரம் 11 வரையான வகுப்புகளில் உடற்கல்வி, சுகாதாரம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் இக்கருத்தரங்கிற்குத் தவறாது அனுப்பிவைக்கும்படி அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-152)

## உருவப்படம் திரைநீக்கம்

வடமராட்சி,செப்.21

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்க நூலகத்தில் அமரர் சட்டத்தரணி இரத்தினசிங்கம் சிவபாதசுந்தரத்தின் நினைவு தினத்தை ஒட்டி அன்னாரின் உருவப்படம் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் இ.உருத்திரா தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அபிரேம்சங்கர் அன்னாரின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார். (ம-173)

## சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

அரியாலை,செப்.21

நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து இப்பகுதியில் திடீர் திடீரென மின்விநியோகம் துண்டிக்கப்படுவதாகவும், வலுக்குறைந்த அளவில் மின் கிடைப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலும் இரவு நேரங்களிலேயே இவ்வாறு சட்டவிரோதமாக மின் பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-17)

## சுருதிப்பெட்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,செப்.21

அகில இலங்கை திருமுறை மன்றத்துக்கு மின்சார சுருதிப்பெட்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும், பொறியியலாளருமான இராசா வாமதேவன் இதனை அன்பளிப்புச் செய்துள்ளார்.

மேற்படி சுருதிப்பெட்டியைப் பயன்படுத்தி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் போதும், ஏனைய ஆலயங்களின் திருவிழாக்களின்போதும் பண்ணிசைக் கச்சேரிகளை நடத்தமுடியும் என்று மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (எ)

## தியாகத் திருவுருவே.....



### அஹிம்சையால் வென்றாய்

போர்க்களம் பலதனில் புலியெனப் புகுந்தான்
பெரும் பல வெற்றிகள் எளிதினில் கண்டாய்!
அகிலம் அதிர்ந்திட அஹிம்சை பூண்டான்
அண்ணல் காந்தியை அஹிம்சையால் வென்றாய்!
தானைத் தலைவன் வழிதனில் சென்றான்
தரணியை வென்றிட சரித்திரம் கொண்டாய்!
ஊரெழு மண்ணில் பூவென மலர்ந்தான்
விடுதலை மண்ணில் விதை என ஆனாய்!

இணுவையூர் அபிராமன்

### உன் கனவின் மடியில்...

அக்கினிச் சூரியன் ஒன்று
ஆகுதியான பொழுதுகளில்...
ஆன்மாக்களின் துடிப்பின் ஒலிகள்.....
துல்லியமாய் பதிவுசெய்யப்பட்டது.......
கடந்துவந்த காலங்களின்........
ஈனப்படுத்தப்பட்ட........ காலடித்தடங்கள்
இன்றும் அப்படியே......
உயிரின் உருகுதலில் வரலாறாய்......
'பரிணமித்த திலீபா.....!
உந்தன் கனவின் மடியில்
விடிவிற்காய் காத்திருக்கிறோம்.

ப.யாழ்மொழி
*கிளிநொச்சி.*

### தமிழீழம் கண்ணீரில் மூழ்கியது

பூவொன்று நீரின்றி வாடியது
பூ கம்பம் பூமியிலே ஆடியது
சாவொன்று சாதனையை நாடியது - நம்
தமிழீழம் கண்ணீரில் மூழ்கியது.
- பூவொன்று -

தீயென்ற வேள்வியது சுடரானது
தீராத துன்பமதில் தலை சாய்ந்தது
போரொன்று உயிரோடு தொடரானது - புலி
யாரென்று உலகிற்குத் தெளிவானது
- பூவொன்று -

காந்தீயக் கொள்கையது தடுமாறுமா?
காலங்கள் பதிலின்றி உருமாறுமா?
நம்தீபத் திலீபன் புகழ் ஒளி குன்றுமா?
நம்நாடு எந்நாளும் சிறையாகுமா?
- பூவொன்று -

மண்ணிலே மா புரட்சி மரமானது - தமிழ்
கண்ணிலே ஈழத்திரு ஒளியானது - இன்றும்
எண்ணிலோ நம் வாழ்வு சிறையானது - திலீபத்
திண்ணமுடம் உழைத்தால் கனிவானது.
- பூவொன்று -

*சி.லலிதா*
*மிருசுவில்.*

# தீவக வளம் பேணுவதற்கு புதிய அமைப்பு உதயம்

மண்டைதீவு,செப்.21

'தீவக வளம் பேணுவோம்' என்ற புதிய அமைப்பு ஒன்று கடந்த வாரம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரிவினரின் வழிகாட்டுதலில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதாக புலிகளின் வேலணை அரசியல் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இந்த அமைப்பு தொழிற்படவுள்ளது. தீவகத்தில் சட்டத்திற்குப் புறம்பாக மணல் ஏற்றுவதைத் தடைசெய்வது, மண்ணரிப்பைத் தடுப்பது, பனை தென்னை போன்ற வளங்களை அழிவில் இருந்து பாதுகாப்பது - தறிக்கப்பட்ட பனை மரங்களை ஈடுசெய்வதற்கான பனை மீள்நடுகையை ஊக்குவிப்பது மற்றும் மண்வள ஆய்வினை மேற்கொண்டு மண் அமைப்பிற்குப் பொருத்தமான மரங்களை நடுவது போன்ற செயற்திட்டங்களை இந்த அமையம் மேற்கொள்ள இருக்கின்றது.

இந்த அமைப்பின் போஷகராக உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகமும், தலைவராக அ.அருந்தவநாயகமும், செயலாளராக இ.சற்குணநாதனும், பொருளாளராக எஸ். சிவலோகநாதனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ம-ரி)

## நிறுவனம் சார் பட்டதாரி ஆசிரியர்கள், நூலகருக்கான நேர்முகத் தேர்வில் திகதி மாற்றம்

மேற்படி பட்டதாரி ஆசிரியர்கள், நூலகருக்கான நேர் முகத் தேர்வு 12-09-2002 திகதிய விளம்பரத்தில் குறிப் பிட்டபடி நாளை (22.09.2002) ஞாயிறு நடைபெறாது என்பதுடன், குறிப்பிட்ட நேர்முகத் தேர்வு 28.09.2002 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்பதைச் சம்பந்தப்பட்ட விண் ணப்பதாரர்களுக்கு அறியத்தருகின்றோம்.

வன்னி. (C-23910) நிறுவனப்பொறுப்பாளர்


இறக்குமதி செய்யப்பட்ட, உயர்ரக

## டச்சு விதை உருளைக்கிழங்கு வகைகள்

ஒக்ரோபர் மாத நடுப்பகுதியிலிருந்து எம்மிடம் கிடைக்கும்.

எதிர்பார்க்கமுடியாத குறைந்த விலை.

அத்துடன்

யாழ்ப்பாண மண்ணுக்கு வாய்ப்பான குறுகிய கால இனவகைகளான வெள்ளை நிற லிரா, செந்நிற ராஜா, செந்நிற லௌரா, செந்நிற றொசன்னா, வெள்ளைநிற எரின்டி, வெள்ளை நிற பிறமியர் என்பனவும் எம்மிடம் கிடைக்கும்.

தொடர்பு: செல்வா - 077-482559

அக்ரோபா பொட்டற்றோ (தனி) நிறுவனம்

இல.100, கென்ற் றோட், கொழும்பு-09.

(C/23909)


## தலைமைத்துவப் பயிற்சி

ஊர்காவற்றுறை,செப்.21

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டின்படி தீவுப்பகுதியிலுள்ள வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற் றுறை ஆகிய பிரதேச சபைகளின் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங் களின் தலைவர், செயலாளர், பொரு ளாளர் ஆகியோருக்கான "கிராம மட்ட தலைவர்களுக்கான தலை மைத்துவப் பயிற்சி" ஒன்று இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை ஊர்காவற் றுறை பிரதேசசபை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையா ளர் தெ.து.விஜயலஷ்சுமி பிரதம விருந்தினராகவும், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி, வேலணை பிரதேச செயலர் செ.இரத்தினம், ஊர்காவற் றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் ஊர்கா வற்றுறை பிரதேச சபை செயலாளர் கு.கணேசலிங்கம், வேலணை பிர தேசசபை செயலாளர் எஸ்.சண்முக ராஜா, நெடுந்தீவு பிரதேச சபை செய லாளர் எஸ்.தில்லைநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-16)

## நிறுவுநர் நினைவும் பரிசளிப்பு விழாவும்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல் லூரி நிறுவுநர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9 மணிக்கு அதிபர் இ.குணநாதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் பிர தம விருந்தினராகவும் கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் இ.சிவ ஞானசுந்தரம், மேற்படி கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் சோ.விஸ்வ லிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர் களாகவும் கலந்துகொள்வர். பழைய மாணவர் பிரம்மஸ்ரீ கு.தியாகராசக் குருக்கள் ஸ்தாபகர் நினைவுப்பேரு ரையை நிகழ்த்துவார். (எ-110)

## துயரில் பங்குகொள்கின்றோம்



எமது குழுவினால் வருடாவருடம் வெளியிடப்பட்டுவரும் மலருக்கு "நல்லைக் குமரன் மலர்" எனப் பெயர் சூட்டி அதன் கௌரவ பதிப்பாசிரியராக 06 ஆண்டுகள் பணிபுரிந்து அண்மையில் வெளிவந்த 10ஆவது மலரையும் படித்துப் பரவசமடைந்த சைவப் பற்றும் தமிழ்ப் பற்றும் மிக்க

**தமிழ்மணி தெல்லியூர் நடராசா**

அவர்களின் மறைவு கேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதோடு, அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு பெரியாரது ஆத்மா சாந்திய டைய நல்லைக் கந்தனின் தாள்பணிந்து இறைஞ்சு கின்றோம்.

சைவசமய விவகாரக் குழு,
*யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.*

(C/23907)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

வீர மைந்தனாய் 09 - 10 - 1969



வீர மறவனாய் 21 - 09 - 2000

### மேஜர் முரளி/பெருங்கீரன்

**வெற்றிவேலு தயாசீலன் (தயா)**

*அழகான கிராமமாம் அராலியில் அற்புத சீலனாய் தோன்றி, எமக்காய் எம்மின மக்களுக்காய் விடிவைத் தேடியவர்களில் ஒருவனாய், விடுதலைக்காய் உயிரை விண்ணிலே உலாவரவிட்ட உத்தமனே! ஆண்டுகள் இரண்டு ஆகியும் உன் நினைவால் கலங்கி நிற்கின்றோம்.*

உன்பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், சகோதரர்கள், மைத்துனர்கள், உறவினர், நண்பர்கள்.

*அராலி மத்தி, வட்டுக்கோட்டை.* (8572)


BASF

## பலட்டால்

அதி உயர்தரம் கொண்ட ஃபைபர் கிளாஸ் ரெசின்னும் ஜெல்கோட்டும்



BASF இன் உற்பத்திப்பொருள்

நீங்கள் சிறிய நடுத்தர அல்லது பெரிய அளவிலான ஃபைபர் கிளாஸ் உற்பத்தியாளராக இருப்பின் நாம் உங்களுடைய சகல மூலப்பொருட் தேவைகளையும் பூர்த்தி செய்வோம்.

பல்வேறு வர்ணங்களில் உற்பத்திகளான பிக்மென்ட்ஸ், கடினமாக்கி மற்றும் துரிதப்படுத்தி (அக்ஸ்ஸலரேற்றர்) மற்றும் மெட் ஆகியவற்றை நாம் விநியோகம் செய்கின்றோம்.

இலவச தொழில்நுட்பச் சேவை

**பீ.ஏ.எஸ்.எஃப் ஃபின்லே (பிறைவேட்) லிமிட்டெட்**

186, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 2. தொலைபேசி: 423388, 074-797200

விநியோகஸ்தர்: ஸ்ரீ மகா விஷ்ணு

இல. 70, 72, ஸ்ரான்லி றோட். யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2049

இன்று இரண்டாவது நாள்

"தமிழ் நாளங்களுள் புதிய செவ்விரத்தம் பாய்ச்சப்படட்டும்
மரபின் அடித்தளத்தில் புதுமைகள் எழுப்பப்படட்டும்"

# திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

# தமிழ் விழா – 2002

**செப். 21, 22 (சனி, ஞாயிறு)**

இன்று மு.ப. 9.30 - நண்பகல் 12.00 மணிவரை கருத்தமர்வுகளும்
மாலை 7.00 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

**மூன்றாம் நாள்: நாளை (22.09.2002) ஞாயிற்றுக்கிழமை**

காலை நிகழ்வுகள்

மு.ப. 9.30 மணி - மன்றக் கலைத்தூது மணிமண்டபம்

கருத்தமர்வுகள்

*தலைமை* : திரு.என்.எஸ்.ஜெயசிங்கம்

☆ *"உலக மயமாக்கலில் தமிழும் பண்பாடும்"*
பேராசிரியர் திரு.நீ.மரியசேவியர் அடிகள்

☆ *"பண்பாட்டு மயமாக்கலில் தமிழர்"*
அருட்கலாநிதி அ.ஜெயசேகரம் அடிகள்

மாலை நிகழ்வுகள்

மாலை 7.00 மணி - மன்ற அரங்கு

*தலைமை:* திரு.சூ.சிறில்
*(தலைவர், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், யாழ்.மாவட்டம்)*

*சிறப்புரை:* பேராசிரியர் அ.சண்முகதாஸ்
*(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*

புலவர் ஆ.செகராசசிங்கம் எழுதிய
'குருமணி ஜோசவ்வாஸ்' நாட்டுக்கூத்து நூல் வெளியீடு

*கலை நிகழ்ச்சிகள்:*

குழுப்பாடல்: (திருக்குடும்ப கன்னியர்மடம் மாணவிகள்)
இசைக்கச்சேரி: செல்வன் தவநாதன் றொபேட் குழுவினர்
நடனங்கள்: திருமதி ஆனந்தஜோதி தர்ஷனின் மாணவிகள்
நாடகம்: "காப்பியக்கனைகள்"
(யாழ்.திருமறைக் கலாமன்றம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-2222393

- திருமறைக் கலாமன்றம்.

Website: www.cpateam.org
e-mail: cpajaffna@eureka.lk (C/23906)

## யா/அத்தியார் இந்துக் கல்லூரி
### நீர்வேலி
### நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

காலம்: நாளை (22-09-2002) ஞாயிறு
முற்பகல் 9.00 மணி
தலைவர்: திரு.இ.குணநாதன் (அதிபர்)
பிரதம விருந்தினர்: கௌரவ N.ரவிராஜ் (நா.உ.)
சிறப்பு விருந்தினர்கள்: திரு.இ.சிவஞானசுந்தரம்
(கோட்டக் கல்வி அதிகாரி, கோப்பாய்)
திரு.சோ.விஸ்வலிங்கம்
(இளைப்பாறிய அதிபர், யா/அத்தியார் இந்துக் கல்லூரி)
கௌரவ விருந்தினர்: திரு.ந.லோகேஸ்வரன் (ஈசன்)
(பழைய மாணவன்)
நினைவுப் பேருரை: பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள்
(நீர்வை மணி - பழைய மாணவன்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நீர்வேலி. (8556)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.சங்கம், ப.மா.சங்கம்

# மரண அறிவித்தல்கள்

பிரபல பல்வைத்திய நிபுணர்

## டாக்டர் கிருஷ்ணபிள்ளை நித்தியானந்தன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய டாக்டர் கிருஷ்ணபிள்ளை நித்தியானந்தன் அவர்கள் 12.09.2002 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை - லக்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் தேவானந்தன் (கனடா), சித்திராங்கனி (அமெரிக்கா), டாக்டர் அசோகானந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும் வைகுந்தவாசன், ஞானசூரியர் (லண்டன்), காலஞ்சென்றவர்களான ஞானச்சந்திரன், சிவகாமசுந்தரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற சிற்சபேசன், டாக்டர் யோகேஸ்வரன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராணி (கனடா), டாக்டர் விக்னேஸ்வரன் (பல்கலைக்கழக விரிவுரையாளர், அமெரிக்கா), டாக்டர் சிந்தியா ஆகியோரின் அருமை மாமனாரும் கிரிஷாந்தன் (அமெரிக்கா), லக்ஷ்மன் (அமெரிக்கா), டர்ஷன் (ஆஸ்திரேலியா), யாழன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.09.2002 திங்கட்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (8563)
தகவல்:
மக்கள், மருமக்கள்.

## திருமதி வேலுப்பிள்ளை கண்ணகப்பிள்ளை

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை கண்ணகப்பிள்ளை நேற்று (20.09.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் வேலுப்பிள்ளை (ரெயில்வே கங்காணி) அவர்களின் மனைவியாரும் நாகம்மா, பத்மாவதி, தவமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் பரராஜசிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2002) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நெடுங்கண்ணி, வல்வெட்டி.* (8540) ப.மகாலிங்கம் (மருமகன்)

## சிற்றூழியரின் கடமை நேரம் அறிவிப்பு

குருநகர்,செப்.21

பாடசாலைகளில் சிற்றூழியர்களாகக் கடமைபுரிபவர்கள் நாளாந்தம் 8 மணித்தியாலம் 45 நிமிடங்கள் கடமையாற்ற வேண்டும் எனப் பாடசாலைக் கல்வி அமைச்சு செயலாளரால் தேசிய பாடசாலை அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள கடமைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த கடமைப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிற்றூழியர்கள் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.15 மணிவரை கடமையாற்ற வேண்டும். இதேவேளை, சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரால் சிற்றூழியர் ஒருவர் காலை 7.30 மணிக்கு கடமைக்கு வருமாறு அழைக்கப்பட்டால், அவர் மாலை 4.15 மணிவரை கடமையாற்ற வேண்டும்.

சிற்றூழியர்கள் தமது கடமை நேரத்தில் பகல்நேர உணவிற்காக 30 நிமிடங்களை எடுக்கலாம். இதே சமயம், காவலாளிகள் 12 மணித்தியாலங்கள் சேவையாற்ற வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-51)

மனைக்கு வெளியே ஒரு மனை!

ஜெசித்தாரா

☆ 'Four in One' சிக்கன் புரியாணி அச்சாறுடன்
விலை 100ரூபா மட்டும்.
☆ முன்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வழமையான உணவுப் பொதிகள் நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை.

"THIS IS NOT A 5 STAR HOTEL
THIS IS A 5 STAR HOME"

ஜெசித்தாரா

19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (8571)

மீண்டும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற
சாவகச்சேரி நகருக்கு
வாடிக்கையாளர் வரவேற்கப்படுகின்றனர்!

சொலெக்ஸ் ஒப்ரிக்கல்
&
லக்ஷறி டென்ரல் வேக்ஸ்

ஆம்!

வெளிநாட்டிலிருந்து நேரடியாகத் தருவிக்கப்பட்ட மெட்றல், பிளாஸ்ரிக் பிறேம் வகைகளில்

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும். சண்கிளாஸ் வகைகள், சொந்தக் கண்களின் தோற்றத்துக்கு நிகரான மாபிள் கண்கள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளவும் -

முத்துப்போன்ற அழகிய சங்குப் பற்களை உங்கள் முக வசீகரத்துக்கேற்ப கட்டிக்கொள்ளவும் -

மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து சீர்செய்து பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் நிச்சயமாக நாடவேண்டிய நம்பகமான இடம்:

சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகமும்
லக்ஷறி பல்கட்டு நிலையமும்
இல.232/A, கண்டி வீதி, சாவகச்சேரி.
(பிரதான பிரதேச செயலகம் முன்பாக) (C/23902)

## விண்ணக வாழ்வின்
# 31ஆம் நாள் நினைவஞ்சலி

"ஆண்டவர் தம் இல்லத்தில் ஊழியுள்ள காலமும் நான் குடியிருப்பேன்"



## செல்வி நிரஞ்சனி சிவஞானம்

*(கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)*

உயிரோடு உறவு தந்து பிரியாத பாசம் தந்து இறையடி சேர்ந்த என் செல்வமகளே! பிரியா உறவால், எம்முடன் இணைந்த எம் நினைவுகளை எண்ணி உம்மைப் பிரிந்த எம் நெஞ்சங்கள் குமுறுகின்றன. கண்கள் குளமாகி, ஆறுதல் கிடையாமல் விம்மிப் புலம்புகின்றன. நீர் உயிர்நீத்த 31ஆம் நாள் இன்று; நிலைகுலைந்து உறவு எண்ணி உம் சொந்தங்கள் இங்கே தவிக்கின்றன. இறையடியில் உமது ஆன்மா சாந்திபெற விழிநீர் சொரிகின்றோம்!

இன்று (21.09.2002) சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் தேவாலயத்தில் அன்னாரின் ஆத்மசாந்திக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

திருமதி எஸ்.சிவஞானம்,
*A.S.F.2, புளூமெண்டால் தொடர்மாடி,*
*கொழும்பு - 13.* (8573)

இவரின் பிரிவால் என்றும் துயருறும்:
அன்பு அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள் மற்றும்
அன்பு நெஞ்சங்கள்.

BASF

# விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி
# SALES PROMOTION OFFICER
## அக்ரோ பிரிவு

BASFபிFன்லே (தனி) நிறுவனம் ஜேர்மனியின் BASF - AG நிறுவனத்தின் ஒரு கிளையாகும். BASF - AG நிறுவனம் வளர்ச்சி மற்றும் புதியன புனைவதன் மூலம் கூட்டு நலன்களை மேலுயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட உலகின் முன்னணியில் இருக்கும் இரசாயன உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகும். எமது உற்பத்திகள் மிகவுயர் பெறுமதி வாய்ந்த இரசாயனப் பொருட்கள், பிளாஸ்ரிக்குகள், வண்ணப் பொருட்கள், (Colorants) நிறமிகள், (Pigments) விவசாய இரசாயனப் பொருட்கள், தூய இரசாயனப் பொருட்கள் என்பனவாகும்.

## தகைமைகள்

அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கல்லூரியொன்றில் டிப்ளோமோ பட்டம்.
வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களில் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான உரிமம், மூன்று மொழிகளிலும் விடயங்களை கையாளும் தகைமை அனுகூலமாக கருதப்படும்.

## வெகுமதிகள்

* சம்பளத்துடன் விற்பனை அடிப்படையில் ஊக்குவிப்பு.
* கவர்ச்சிகரமான பிற அனுகூலங்கள்.
* மிகு கவர்ச்சிகரமான தொழில் நிபந்தனைகள்.

விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு முழுமையாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரப் பட்டியலுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

விளம்பரத்திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், அக்ரோ பிரிவை வந்தடைதல் வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:

The General Manager - Agro
BASF - Finlay (Pvt) Ltd,
186, Vauxhall Street,
Colombo - 02.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பல இனங்களில் குருவிகள், பல வர்ணங்களில் மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (8384)

Steel Filing Cabinet, Typewriter, Bed மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (Hindu Primary க்கு அண்மையில்) (8524)

குபேட்டா K.75 லாண்ட் மாஸ்ரர் சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உள்ளது (குருநாகலில் இருந்து நேரடியாக கொண்டுவரப்பட்டது). தொடர்பு: 127, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (8519)

YAMAHA MATE 90 மோட்டார் சைக்கிள், Fax மெசின் (Panasonic 580 Bx), Cordless ரெலிபோன் [Sanyo CLT 98 - 5KM (புதியது)] என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.கேதீஸ்வரா, "நமிலாஸ்", நெல்லண்டை, பருத்தித்துறை. T.P 070-212247. (8510)

டிஸ் அன்ரனா டிஜிட்டல் (DSR-2800) றிசீவர் L.N.B.F. பகுபிக் புதியது Sony Video/Audio 3CD Mini-hifi MHC Vx 333 செற் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P 2863. (8503)

மானிப்பாய் சந்தைக்கு முன் ஒழுங்கையில் 31/4 பரப்புக்காணி வீடு, கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.பவுசி, பக்கஸ் லேன், மானிப்பாய். (8462)

விறகு நிறுக்கும் பெரிய எவரி, துலாத் தராசு 110 கிலோ படிகளுடன் விற்பனைக்குள்ளது. தொடர்பு: A.மல்லிகா (சுழிபுரம் தபால் நிலையத்துக்கு அருகில்), ஆனைக்கோட்டை.(8461)

General Cool (New) XPB45 - AS Twin - Tub Washing Machine 4.5Kg சலவை செய்யக்கூடியது, BPL T.V 51cm (20") Colour T.V (New), நீர் இறைக்கும் இயந்திரம் Robin Ey -15 என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வேகிருஷ்ணபிள்ளை, கிளிவெட்டி, அல்வாய் மேற்கு, அல்வாய். T.P: 070-213034. (8515)

Love Birds (லவ்பேட்ஸ்) குருவிகளும் அதற்குரிய கம்பிக் கூடுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பி. திலீபன், மூணாமலை ஒழுங்கை, சுதுமலை அம்மன் கோயிலடி. (8525)

நல்ல நிலையிலுள்ள நிஸான் சனி வகன் (Nesan sunny Ad Wagon Model) மொடல் 14 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. பகல் 2 மணிக்குப் பின் பார்வையிடலாம். 315/4, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். T.P 077-686646. (8526)

நல்ல நிலையில் உள்ள CD185 Model மோட்டார்சைக்கிள் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: P.கிருபா, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி. (8483)

புதிய இன வர்ண மீன்களும், மாபிள்ஸ்ரார், ஒஸ்கா, இன்னும் பல இன மீன்களையும், அறுகோண தொட்டிகளும் அதற்குரிய பொருள்களும் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: 535A, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி (பெற்றோல் நிலையம், அருகில்), யாழ்ப்பாணம். (8508)

நல்ல நிலையிலுள்ள Town ACE வான் யா/பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முன்பாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ஜீவானந்தம், C/o K.புவனேசன், 173,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (8560)

## வளர்ப்பு மீன் விற்பனை

பல இன கலர் மீன்கள் Air Pump, தொட்டி, உபகரணங்கள், மருந்து வகைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8502)

## காணி விற்பனைக்கு

கைதடிச் சந்திக்கு அண்மையில் மானிப்பாய் வீதியில் மூன்று பரப்பு குடியிருப்புக் காணி, ஆவரங்கால் மேற்கில் 51/4 பரப்பு செம்மண் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 34, முருகேசர் வீதி, நல்லூர். (8262)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குள்ளது. (1Kg 150/- சுத்தம் செய்தலும் இலவசம்) தொடர்பு: S.கணேஸ், மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் அல்லது மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (8509)

புறொயிலர் விற்பனைக்குள்ளது. 1kg - 135/-. இறைச்சி 200/- மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்வது இலவசம். தொடர்பு: மருதனார்மடம் றோட், உரும்பிராய். (8466)

BAHIRAHA No. I புறொயிலர் குஞ்சுகள் இன்று பிற்பகல் பெற்றுக் கொள்ளலாம். தேவையானவர்களும் பதிவுசெய்தவர்களும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 40, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (8470)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: யோகன் மாஸ்ரர், பாரதி வீதி, சந்நிதி றோட், அச்சுவேலி. 1Kg - 140/- (8545)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் காலை 6.00 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8421)

புறொயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சேவல் குஞ்சுகள்/விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 166/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (8533)

புறொயிலர், சேவல், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறையில் மலிவு விலையில் தினந்தோறும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு ச.லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (8549)

## ஆடு விற்பனைக்கு

நல்ல இன ஜமுனாபாரி ஆடுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8422)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 30 வயதுடைய மிருகசீரிடம் 3, பயிற்றப்பட்ட பெண் ஆங்கில ஆசிரியைக்கு 33 வயதுக்குட்பட்ட மணமகனும், 37 வயதுடைய, சித்திரை 3, ஆண் ஆங்கில ஆசிரியருக்கு 38 வயதுக்குட்பட்ட மணமகளும் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: S.சண்முகராஜா மதிப்பாளர் 387, கோயில் வீதி, நல்லூர். (8517)

உள்நாட்டில், வெளிநாட்டில் பணிபுரியும் மணமக்களுக்கு பட்டதாரி மணமக்கள் தேவை. ஸ்பொன்சர் வசதி உண்டு. ஜாதகம், போட்டோ என்பவற்றுடன் 29-09-2002இற்கு முன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். N.கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (8479)

## வீடு தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் அரசாங்க உத்தியோகத்தருக்கு வீடு விலைக்குத் தேவை. விற்க விரும்புவோர் பகல் 1.00 மணிக்கு பின் தொடர்புகொள்ளவும். தொலைபேசி: 071-277685 (C/23880)

## எங்கள் நாடு

ஆசிரியர் தினத்தில் நடிப்பதற்குப் பொருத்தமான பரிசு பெற்ற ஏழு இலங்கை வானொலி நாடகங்கள், 350 நாடகங்கள் எழுதிய அராலியூர் நசுந்தரம்பிள்ளையின் 8ஆவது நாடக நூல் ரூபா 75.00. (8547)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல் இணைந்த கணிதம் பல ஆண்டுகளாகக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் 20 வருட A/L வினாத்தாள்கள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். சந்திப்பு தினசரி 3.00 மணிக்கு பின்பு. சிறந்த பெறுபேறுகளைப் பெற R.பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey) Dip.in Edu., 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## வகுப்புகள்

சுலபமான முறையில் ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் உடன் ஆங்கிலத்தில் கதைக்கப் பயிற்சி மற்றும் இலக்கணம், கடிதம், வினா-விடை வகுப்புகள். ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (8522)

சங்கீதம், நடனம் அத்துடன் ஆங்கில வகுப்புகளும் தரம் 3 முதல் கற்பிக்கப்படும். தொடர்பு: இல.36, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (8207)

## ஆங்கில வகுப்பு

ஆங்கில ஆசிரியரினால் க.பொ.த. (சா.த.) டிசெம்பர் 2002 ஆங்கில மீட்டல் வகுப்புகள் (Past Question) and Model Papers) ஆரம்பம் 01.10.2002 புதிய இலக்கம் 33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (8542)

## தவறிவிட்டது

மந்திகை-வல்லிபுரம், பருத்தித்துறை - தும்பளை வீதிக்குமிடையில் மூக்குக் கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புலோலி பொது நூலகரிடம் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (8514)

சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த மலர்விழி புவனேந்திரன் என்பவருடைய தே.அ.அ.(இல.746492430V), வி.அ.அ.(இல.0905010173) என்பன 16.09.2002 அன்று மாதகல் லைன் மினிவானில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். (8534)

## மலசல கூடங்களை புனரமைக்க முடியாத நிலை

குருநகர் தொடர்மாடிக்கருகில் இராணுவம் நிலை கொண்டிருப்பதனால் இம்மாடியிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் சேதமடைந்த நிலையில் காணப்படும் மலசல கூடங்களை புனரமைக்கமுடியாமல் இருப்பதாக யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார்.

இராணுவம் இவ்விடத்தை விட்டு விலகும் பட்சத்திலேயே சேதமடைந்துள்ள மலசல கூடங்களை முழுமையாகப் புனரமைக்க முடியும் அத்துடன் வன்னியிலிருந்து குருநகருக்கு வந்து வேறு இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ள ஐந்து மாடிக் குடியிருப்பாளர்களை மீண்டும் சொந்த வீடுகளில் குடியேற்ற முடியும் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஏ-51)

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

இந்திய ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், காதல் தோல்வியா? கல்வியில் தடையா? திருமணப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? குழந்தைச் செல்வம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? தொழில் பிரச்சினையா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம்மூலம் தீர்வுகாணலாம். சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள். வியாழன் விடுமுறை.

**மணிசாமி சாமி**

யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி, இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்). (8280)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக பணியாளர்

**தோழர் திரு.செ.தர்மலிங்கம்**

*(நல்லூர் ப.நோ.கூ.சங்க களஞ்சிய விற்பனை உதவியாளர்)*

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்லத்துரை அன்னம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.

(8544)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 07 - 1978



உதிர்வு 21 - 09 - 1993


**செல்வன் கு.சிவகுமார் (சிவா)**

மாறாத சோகத்தை மண்மீது தந்து
மீளாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்ட
எங்கள் குடும்பக் குலவிளக்கே!
எமதருமைச் சகோதரனே!
பாசமுடன் நாம் பரிதவித்துப் பார்த்திருக்க
விழிமூடி நீர் விண்ணுலகம் சென்றதேனோ?
எம்விழி நீரால் உமை அஞ்சலித்து நிற்கின்றோம்.

- அப்பா, அம்மா, அக்காமார், அத்தான்மார், மருமக்கள்.

*கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.*

(8548)



## FUJIFILM



**யாழ்.மாவட்டத்திற்கு**

## விநியோகஸ்தர் தேவை

இலங்கையின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான ஹேலீஸ் (Hayleys) நிறுவனத்தினர் கீழ்வரும் பொருள்களைச் சந்தைப்படுத்த தகுதிவாய்ந்த விநியோகஸ்தரை எதிர்பார்க்கின்றனர்.

- பியூஜி பிலிம் (FUJI FILM)
- கமரா (CAMERA)
- அல்பம் (ALBUM)
- பட்டரிகள் (BATTERIES)

*விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமை உடையவர்களாக இருத்தல் அவசியம்.*

- போதுமான களஞ்சிய வசதி
- வங்கி உத்தரவாதம்
- பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான வாகன வசதி

*உங்கள் விண்ணப்பங்களை 05.10.2002இற்கு முன்னதாக அனுப்பவும்.*

**Business Unit Manager,**
**Photo Imaging Dept.,**
**Hayleys Consumer Products Ltd.,**
**25, Foster Lane,**
**Colombo - 10.**

077-328463
077-360490
01-699091

(8557)



யாழ்ப்பாணம் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலாசார விழா நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் உரையாற்றுகிறார். நாட்டுக்கூத்து கலைஞர் முத்துக்துரை அலெக்ஷாண்டருக்கு பேராசிரியர் நி.மரியசேவியர் அடிகள் பொன்னாடை போர்த்து கௌரவிக்கிறார். நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

*படம்:வசந்தகுமார்.*

# கல்வித்துறை அபிவிருத்தி கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.குடாநாட்டின் கல்வித்துறையைப் புனரமைத்து மாணவர்களின் கல்வியினை மேம்படுத்துவதற்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றது.

மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, ஆசிரியர் வாண்மை விருத்தி, அறிவியல் தொழில்நுட்ப அபிவிருத்தி, விளையாட்டுத்துறை அபிவிருத்தி ஆகிய துறைகளில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தக் கல்விப் புனரமைப்பு குறித்த கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண.பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் குடாநாட்டிலுள்ள கல்வியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-4)

## தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பூரணை தினத்தையொட்டி நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியவை இன்று காலை 8.30மணியளவில் நவாலி கதிர்காம முருகன் ஆலயத்தில் மன்ற உப தலைவர் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறும்.

## தமிழ் விழாவில் இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.21

திருமறைக் கலாமன்றம் கலைத்தூது மண்டபத்தில் நடத்தும் தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வுகள் முற்பகல் 9.30 மணிக்கு க.இராஜகோபால் தலைமையில் ஆரம்பமாகும். தொடர்ந்து தமிழ்த் திரைப்படங்கள் 'மாயையும் யதார்த்தமும்' என்னும் தலைப்பில் அ.யேசுராசாவும் -

'ஈழத்தமிழர் வாழ்வியலில் புனைக்கதைகள்' ஏற்படுத்திய தாக்கம் என்னும் தலைப்பில் எழுத்தாளர் க.குணராசாவும் -

'நவீன நாடகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் கரதீதரனும் - கருத்துரை வழங்குவர்.

மாலை நிகழ்வுகள் இரவு 7 மணிக்கு திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் தலைமையில் ஆரம்பமாகும். தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை சிறப்புரை நிகழ்த்துவார். பின்னர், ம.சாம் பிரதீபன் தலைமையில் 'தூதுபோ என் கவியே' என்ற தலைப்பிலான கவியரங்கம்-

இசைக் கலைஞர் மரியாம்பிள்ளை, நாடகக் கலைஞர் பபூன் அலைக்ஸாண்டர் ஆகிய கலைஞர்களுக்கான கௌரவிப்பு விழாவும் இடம் பெறும்.

இறுதியில் திருமறைக்கலாமன்ற கலைஞர்கள் வழங்கும் 'ஏகலைவன்' நாட்டுக்கூத்தும் இடம்பெறும். (எ-ரி)

## கலைவிழா

சங்கானை, மாவடி இந்து இளைஞர் மன்றமும் சங்கானை, மாவடி இந்து மகளிர் மன்றமும் இணைந்து நடத்தும் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு சங்கானை சிறுவர் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத் தலைவர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் கலந்துகொள்கிறார். (ஐ-3)

## உதடு, நாசி பிளவு சத்திர சிகிச்சை முகாம்

களுவாஞ்சிக்குடி,செப்.21

உதடு, நாசி பிளவுபட்டவர்களுக்கான விசேட சத்திர சிகிச்சை முகாம் ஒன்று நேற்றுக்காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஆரம்பமானது.

மட்டக்களப்பு றோட்டறிக் கழகத் தலைவர் கே.கருணாகரனின் ஏற்பாடு இது. எதிர்வரும் 23ஆம் திகதி வரை சிகிச்சைகள் நடைபெறும். பாணந்துறை வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் ஹர்ஷா டி.சில்வா கொழும்பு வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் நலின் ஜெயதிலக்க ஆகியோர் தலைமையிலான டாக்டர்கள் குழு சிகிச்சைகளை மேற்கொள்கின்றது. (ஐ)

## சீரடி பாபாவின் சத்சரிதம் வாசிப்பு

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை சீரடி பாபாவின் சத்சரிதம் வாசிக்கப்படும்.

தினமும் காலை 8.30மணிக்கு, இந்த நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

27ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீரடி பாபாவின் ஜெயந்தி தினத்தன்று நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ)

## மட்டு. அரச அதிபர் கடமையேற்றார்

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக ஆர்.மோனகுருசாமி நேற்று மதியம் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இவர் ஓய்வுபெற்ற போதும் அமைச்சரவைத் தீர்மானத்தின்படி மீண்டும் அரச அதிபராக நியமனம் பெற்றுள்ளார். மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக இருந்த எஸ். சண்முகம் திறைசேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். (ஐ)

## சமயசந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,செப்.21

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

மகோற்சவ காலங்களில் 'கந்தபுராணம்' பற்றித் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திவரும் கானகதாவாரிதி வை. நித்தியாநந்தசர்மாவைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆலயமண்டபத்தில் நடைபெறும். (எ)

☆ ☆ ☆

ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் ஆலயத்தில் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் எள் எண்ணை எரித்தல், விசேட நவக்கிரக வழிபாடுகள் என்பன நடைபெறும் என ஆலயத்தின் தர்மபரிபாலகர் அறிவித்துள்ளார். (எ)

☆ ☆ ☆

மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் புதிய சிற்றாலய திறப்பு விழா எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

தென் இந்திய திருச்சபையின் பிரதம பேராயர் கே.ஜே.சாமுவேல் வழிபாட்டுடன் ஆசீர்வதித்து சிற்றாலயத்தை திறந்துவைப்பார்.

யாழ்ப்பாணம் ஆதீன பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் விழா இடம்பெறும். (ஒ-152)

## கடவுள்சுவாமி குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.21

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 23ஆவது குருபூசை தின நிகழ்வுகள் நாளை காலை 9மணி முதல் உடுவில் கிழக்கில் உள்ள கடவுள் சந்நிதியில் நடைபெறவுள்ளன.

விசேட பூசை வழிபாடுகள், பஜனை என்பனவும் இடம்பெறும். (எ)

## கடையிற்சுவாமிகள் குருபூசை நிகழ்வு

வண்ணை - நீராவியடி கடையிற் சுவாமிகளின் 111ஆவது குருபூசையும், அன்னதான நிகழ்வும் இன்று ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளன.

இன்று காலை 7 மணிக்கு சுவாமிகளுக்கு ஸ்நபனாபிஷேகமும் விசேட பூசையும் இடம்பெற்று முற்பகல 11.30 மணிக்கு குருபூசை வழிபாடும் அன்னதானமும் இடம்பெறும். (எ-ரி)


லக்ஷ்மி இணுவில்.
விக்ரம், கிரன், மனோரமா நடித்த
ஜெமினி
(சினிமா)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே.)
(8577)

நாகம்ஸ் சுன்னாகம்
சூர்யா, லைலா, ஸ்நேகா நடிக்க
உன்னை நினைத்து
(சினிமா)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நே.)
(8520)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், சாக்ஷி, கவுண்டமணி நடித்த
வேதம்
(சினிமா)
காட்சிகள்: 11.00, 3.30, 6.00 (புதியநேரம்)
(C-23810)

ராஜா யாழ்ப்பாணம்.
24ஆம் திகதிவரை
ரஜனி, மனிஷா, கவுண்டமணி நடிக்க
பாபா
காட்சிகள்:10.30, 2.30, 6.00
(C-23909)


# கண்ணீர் அஞ்சலி

எமது ஆசை மருமகனாகிய

## ஸ்ரனிஸ்லாஸ் ஸ்ரோபன்

அகால மரணமடைந்ததையிட்டு துயருறும் எமது அண்ணன் குடும்பத்தினருடன் துக்கத்தை பகிர்ந்துகொள்கின்றோம்.

திரு.திருமதி அன்ரன் J.P.
திரு.திருமதி ஜெயதாசன்
திரு.திருமதி யூலி
. திரு.திருமதி அசம்ரா
அப்பம்மா குடும்பத்தினர்.

*இல.1, 3ஆம் குறுக்குத்தெரு,*
*பாஷையூர்,*
*யாழ்ப்பாணம்.* (8578)

# விமல் எம்.பியின் உடைமைகள் பற்றி லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விசாரணை

கொழும்பு,செப்.21

ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச எம்.பிக்குச் சொந்தமான உடைமைகள் குறித்து லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விரிவான விசாரணையை ஆரம்பித்திருக்கிறது.

ஜே.வி.பியின் வங்கிக் கணக்கு ஒன்று குறித்து ஆராயுமாறு பிலியந்தலைப் பிரதேச வாசி ஒருவர் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே இவ் விசாரணை நடைபெறுகிறது.

விமல் வீரவன்ச எம்.பிக்குச் சொந்தமானவை எனக் கூறப்படும் மாகொல, மாவரமண்டிய பகுதியில் உள்ள தொலைபேசிச் சேவை நிலையம், கட்டடம் ஆகியவை பற்றிய விவரங்களை ஆணைக்குழு பெற்றிருப்பதாகத் தெரிகிறது. (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு மீனாட்சிப்பிள்ளை

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த திருமதி முருகேசு மீனாட்சிப்பிள்ளை நேற்று (20.09.2002) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய தலைமை ஆசிரியர் க.முருகேசு அவர்களின் பாரியாரும் தில்லைநாயகம் (இளைப்பாறிய எழுதுநர் - நெல்லியடி பட்டினசபை), இந்திராதேவி (கொழும்பு), சாரதாதேவி (கொழும்பு), தெய்வநாயகம் (நெதர்லாந்து), காலஞ்சென்ற அருமைநாயகம் (கொழும்பு) மற்றும் செல்வநாயகம் (நெதர்லாந்து), சௌந்தரநாயகம் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லம்மா, காலஞ்சென்ற மார்க்கண்டன் (இளைப்பாறிய மொழிபெயர்ப்பாளர் - கச்சேரி - வவுனியா) மற்றும் நடராஜா (கொழும்பு), பார்வதி (நெதர்லாந்து), புனிதவதி (கொழும்பு), காலஞ்சென்ற யோகம்மா மற்றும் ராகினி (நெதர்லாந்து), மாதங்கி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15, இராஜசிங்கம் வீதி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி. (சம்பந்தர் கடை)* (C/23911)

தகவல்:
மு.தில்லைநாயகம் (மகன்)

## ஆறுமுகம் வேலுப்பிள்ளை

நாவற்காடு, குடமியனைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் 19.09.2002 வியாழக்கிழமை வவுனிக்குளத்தில் காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் மனோன்மணி, மனோராணி (ஆசிரியை), மல்லிகாதேவி (கனடா), மனோரஞ்சிதம் (ஆசிரியை), மனோகரன், மகேந்திரம், மங்களேஸ்வரன், மகேஸ்வரி (ஆசிரியை), மகாதேவன், மங்களேஸ்வரி (கலைப்பட்டதாரி), மதிவதனி (யாழ்.வளாக கலைப்பிரிவு இறுதியாண்டு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2002) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் வவுனிக்குளத்தில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*கொடிகாமம்.*

தகவல்:
குலநாயகம் கணேசமூர்த்தி
(இராசா - மருமகன்)

தற்காலிக முகவரி:
*இல.28, 2ஆம் யுனிற் பாலிநகர்,*
*வவுனிக்குளம்.* (8579)

## நாகலிங்கம் சுப்பிரமணியம்

குரும்பசிட்டியை நிரந்தர வதிவிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (20.09.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குரும்பசிட்டி நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் திருமதி இராசேந்திரம் பாக்கியத்தின் அருமைச் சகோதரரும் இராசபூபதி அவர்களின் அன்புக் கணவரும் சிவபாலன், சிவரூபன், சிவமதன், திருக்குமார், சுலக்சனா, சுபதாஸ், சுமித்திரா, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கட்டுவனைச் சேர்ந்த அருமைத்துரை - அன்னலக்ஷ்மி தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (21.09.2002) சனிக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.இராசபூபதி (மனைவி)
இ.பாக்கியம் (சகோதரி)

*சந்தையடி ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (8580)

## திருமதி இராசேந்திரம் தங்கம்மா

அல்வாய் வடக்கு, ஆலங்கட்டையைச் சேர்ந்த அமரர் முருகேசு இராசேந்திரம் அவர்களின் அன்புத்துணைவியார் தங்கம்மா அவர்கள் நேற்று (20.09.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் லயன் இரா.இராஜேஸ்வரன் (உதவிப்பதிவாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம், முன்னாள் சர்வதேச லயன் கழகங்களின் யாழ்.மாவட்ட தலைவர்), ஜெயனேஸ்வரன், குகனேஸ்வரன் (உரிமையாளர் - லதா மோட்டோர்ஸ், மட்டக்களப்பு), திருமதி தங்கநிலா சந்திரவேல், குமரேஸ்வரன் (பரு.ப.தெ.வ.அ.கூ.சங்கம்), முருகேஸ்வரன், ஞானேஸ்வரன் (லண்டன்), வெண்ணிலா, திருமதி உதயநிலா உதயணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜசுலோஜினி, நிதிகலா, லதா, சந்திரவேல், நந்தினி, சுவந்தி, உதயணன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். திருமதி சிவபாக்கியம் சுப்பையா, தா.வீரசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), அமரர் சிந்தாமணி வைபாபுரி, அமரர் அம்பிகாவதி கணேசன், தா.பேரின்பநாதன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் இல.வங்கி), திருமதி தவநாயகி செல்லத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் பூரணம் சதாசிவம், மு.வடிவேலு, அமரர் வசந்தாதேவி பரஞ்சோதி, மு.கந்தசாமி, மு.சிவஞானசுந்தரம், மு.கோவிந்தராசா, மு.வரதராஜன், திருமதி செல்வராணி சித்திவிநாயகம், திருமதி செல்வாம்பிகை முருகானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் இராஜவர்மன் (மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), இராஜவர்த்தனி (மருத்துவபீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), இராஜவினோதினி (நிதிமுகாமைத்துவப் பீடம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), இந்திரவர்மன், நிவேதிகா, ஜெதுர்ஷா, நிரூபா, ஜெனுஷா, மதுர்ஷன், ஹர்ஷாஜினி, ஹேஷாயினி, சாருஷா, வீனுஷா, பிரணவன், அபிஷானி, தர்ஷிகன், பிரிந்திக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2002) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக அன்னாரின் பூதவுடல் பருத்தித்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*"நிலாதாரகை"*
*ஆலங்கட்டை, அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.* C/23912)

தகவல்:
லயன் இரா.இராஜேஸ்வரன்
(மகன்)

# தென்னாபிரிக்க அணிக்கு 176 ஓட்டங்களால் வெற்றி

ஐ.சி.சி சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்க அணி, கென்யா அணியை 176 ஓட்டங்களால் வென்றது.

நேற்று ஆர்.பிரேமதாஸ அரங்கில் பகல் - இரவு ஆட்டமாக இப்போட்டி நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஹெர்சல் கிப்ஸ் 116 ஓட்டங்களைக் குவித்தார். 126 பந்து வீச்சுக்களை எதிர் கொண்ட அவர் 3சிக்ஸர், 13 பௌண்டரிகளையும் விளாசினார்.

கிரேம் ஸ்மித் 69ஓட்டங்களையும், ஜக் கலிஸ் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

50 ஓவர்கள் முடிவில் 316 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்க அணி. இச்சுற்றுப் போட்டியில் இதுவரை பெறப்பட்ட ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கை இது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி தனது முதலிரு விக்கெட்டுக்களையும் 5 ஓட்டங்களுக்குள் இழந்தது.

46.5 ஓவர்களில் 140 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது அவ் அணி. இதனால் தென்னாபிரிக்கா 170 ஓட்டங்களால் வென்றது.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரக்க அணி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அல்லது இந்திய அணியை தென்னாபிரிக்கா எதிர் கொள்ளவுள்ளது. (ஐ)

## முன்பள்ளி ஆசியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.21

தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேனொளி முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களைத் தவறாது சமுகம்தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# புலிகள் தடை நீக்கம் பற்றிய அ.தி.மு.க.நிலையில் மாற்றமில்லை

சென்னை,செப்.21

இலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்பட்டாலும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தொடர்ந்து தடை செய்யவேண்டும் என்ற தமது கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று தமிழக முதல்வரும் அ.தி.மு.க.பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு வியாழக்கிழமை அவர் அளித்த பேட்டியில் -

தனிஈழக் கோரிக்கையைக் கைவிட்டதன் மூலம் விடுதலைப்புலிகள் தங்கள் நிலையில் இருந்து இறங்கி வந்துள்ளனரா? இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முன்னேற்றத்திற்கு இது அறிகுறியா? என்பது பற்றி கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. அது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்றார் ஜெயலலிதா. (ஐ)

## சேனை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈகச்சுடர் ஏற்ற, திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

பயிற்சியை முடித்துக் கொண்டவர்களின் பல்வேறு சாகச நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அப்பொழுதே மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான முகாம் ஒன்றை அவர்கள் தாக்கி அழித்தனர்.

போர்ப் பயிற்சி ஆசிரியர்களுக்கு அரசியல் பொறுப்பாளர் திலக் சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்சியில் அணிகளின் பொறுப்பாளர்களும் மகளிர் அணிப் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

கண்காணிப்புக் குழு உறுப்பினர் சட்டத்தரணி சிவபாலன், இரா.சம்பந்தன் எம்.பி ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (ஐ)

## ஆஸி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தமது இயக்கத்துக்கு ஆள்களை இணைப்பது தொடர்பாகவும்- மக்கள் மீள்குடியமர்தல் பற்றியும் தூதர் விவரமாகக் கேட்டறிந்தார்

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஊடாக யாழ்.மாவட்டத்துக்கு 70 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளதாகவும்-

மேலும் உதவிகள் வழங்க ஆஸ்திரேலியா தயாராக இருப்பதாகவும் - அவர் தெரிவித்தார். (ஐ-3)

## அரசமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.க அரசு சமாதானம், ஜனநாயகம் என கவனத்தை ஈர்த்து அவற்றின் மூலம் மக்களுக்கு பாதகமான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. அதையே நாம் எதிர்க்கிறோம்.

ஐ.தே.க அரசின் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை எதிர்த்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம். அதற்காக தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியுள்ளோம். நாம் ஏற்கனவே நடத்திய ஆர்ப்பாட்டங்களின் பயனாக பெற்றோல் விலை குறைந்துள்ளது. சமுர்த்தி நிவாரண வெட்டு நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் நாம் அரசின் குறைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம் - என்றார். (ஐ)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டரை அவரது வீட்டுக்கு சமீபமாக வைத்து இனந்தெரியாத நபர்கள் சுட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பணத்துக்காக கொலைசெய்யும் கும்பல்களே இக்கொலையைப் புரிந்திருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த விசேட பொலீஸ்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## சோக்கல்லோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளவத்தை பெண்கள் ஆய்வு நிலையத்தில் நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பித்தார்.

இயற்கைக் கடன்களைக் கழிக்கக்கூட நேரமெடுக்காமல் சோக்கல்லோ சண்முகம் தொடர்ந்து பேசினார். பேசுவதற்கு குறிப்பு எதையும் அவர் வைத்திருக்கவில்லை. சுவாரசியமாக பேசினார். மொத்தம் 7 மணி 40 நிமிடங்கள் பேசிய அவர் நாலரை மணி நேரம் பேசிய பின்னரே தண்ணீர் அருந்தினார்.

பேராசிரியர் சிவசேகரம், சி.வன்னியகுலம், கா.செந்தில்வேல், கலாநிதி செல்வி திருச்சந்திரன், ச.இலகுப்பிள்ளை, ஆ.பிரான்ஸிஸ் ஜெனம், மா.கணபதிப்பிள்ளை, த.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர். (ஐ)

## தமிழ் நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் இலங்கை அகதிகள் சுமார்1400பேர் தங்கியுள்ளனர். இவர்களில் கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, மனனார் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகமாகவுள்ளனர்.

பெருமாள்புர முகாமிலுள்ள அகதிகள் கூறியதாவது:-

இலங்கையில் அமைதி ஏற்பட தாய்லாந்தில் நடைபெற்றுள்ள இரு தரப்பு பேச்சு குறித்து தொலைக் காட்சி மற்றும் பத்திரிகைமூலம் அறிந்தோம்.

முதற்கட்டபேச்சில் இந்த அளவிற்கு முன்னேற்றம் ஏற்படும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

இலங்கை அரசு மற்றும் விடுதலைப்புலிகள் பேச்சுக்குப் பின்னர் கூட்டுக்குழு அமைக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களை மீண்டும் குடி அமர்த்துவதாகவும், அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுவதாகவும் உள்ள அறிவிப்பு அகதிகளாகிய எங்களுக்கு விடியலை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது எங்களின் குழந்தைகள் இங்குள்ள பள்ளிகள், கல்லூரி மற்றும் தொழில் நுட்பக்கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். இந்த கல்வியாண்டுநிறைவடைந்த பிறகே எங்களால் இந்த முகாமில் இருந்து குழந்தைகளுடன் இலங்கைக்கு திரும்ப இயலும்.

தமிழகத்தில் எங்கள் குழந்தைகள் பயின்ற கல்வித் தகுதியின் அடிப்படையில் மீண்டும் இலங்கையில் படிப்பைத் தொடர இருதரப்புப் பேச்சில் அதற்கான தீர்வு காணப்பட வேண்டும்.

இலங்கையில் தாங்கள் விட்டு வந்த இடங்கள், உரியவர்களுக்கு மீண்டும் கிடைக்கவும் உறுதியான நடவடிக்கையை கண்காணிப்புக்குழு எடுக்கவேண்டும் - என்றனர். (ஐ)





நாடுபூராகவும் 24 மணி நேர சேவை

உங்களுடைய மிக முக்கிய ஆவணங்கள், சகலவிதமான பொதிகள் முதலியன ஏற்றுக்கொள்ளலும், விநியோகமும் உண்டு.

வேறு பிற தகவல்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

புரொண்டோ
லங்கா பிறைவேற் லிமிட்டெட்,
217, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 2273. (7340)

A/L 2004
LOGIC
அனுமானம்
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம்:- 22.09.2002
காலை 8 மணி
BEACON,
(8561) யாழ்நகர்

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி யாழ்.நகர்
சரளமாக உரையாட
பிரிவு 3 சிங்களம்
BY: லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 22.09.2002 Sun 8.30
Sat, Sun 8.30 a.m. (8550)

IBMS IBMS IBMS IBMS IBMS
I B M S
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
Diploma in Business Application. (DBA)
Ms Office உடன்
SLCDL பாடத்திட்டமும் உள்ளடக்கப்பட்டது.

| Ms WORD | Ms ACCESS |
|---|---|
| ஆரம்பம்:21/09/2002 | ஆரம்பம்:21/09/2002 |
| SAT/ SUN 11.00 -1.00 | SAT/SUN 7.00 - 9.00 a.m 3.00 - 5.00 p.m |
| 701, k.k.s, Road, Jaffna. | TUE/THUR 9.00 - 11.00 |

நியூ நேயல் அக்கடமி - சங்கத்தானை
A/L DAY, 2003
கம்பனி முடிவுக்கணக்கு
BY: 8.முகுந்தன் (B.B.A.Hons.EM(spl))
ஆரம்பம்: 24.09.2002 செவ். 3.00 p.m
(8458)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
புதிய பிரிவு ஆரம்பம்
Web Designing
Java Applet, HTML, Flash
ஆரம்பம் 21.09.2002, பி.ப 2.15 மணிக்கு


யா/யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
வருடாந்தப் பொதுக்கூட்டம் ஒத்திவைத்தல்

நாளை 22.09.2002 காலை 10 மணிக்கு நடைபெறுவதாக இருந்த பொதுக் கூட்டம் தவிர்க்கமுடியாத புறக் காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். அத்துடன் இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம். புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

சி.விக்கினராசா, தலைவர்.
த.வாமதேவன், செயலாளா, பழையமாணவர்சங்கம், யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை (c/23913)

RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டது. உறுதியான, நீடித்து உழைக்கும் வானுயர்ந்த கட்டடங்களுக்கு கோபுர சின்னம் பொறித்த ராம்கோ RAMCO சிமெந்து.

யாழ்நகரில் ஏக விநியோகஸ்தர்கள்:
ஈஸ்வர பகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-2350.
தேவையானோர் உடன் தொடர்புகொள்ளவும். முற்பதிவு செய்தோருக்கு விநியோகம் இலவசம்.
தரமிகு CEMENT RAMCO CEMENT
(C/23908)

பனைமரம் தறிப்போர் கவனத்துக்கு
அனுமதியின்றி பனை தறிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

எமது ஆதார சக்தியாக விளங்கும் தேசிய வளமான பனை மரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கிலும் இந்த வளப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டும் இந்த வளம் தொடர்பான நலன் விரும்பும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து பனை தறிப்பதற்கான ஒரு நடைமுறையை 01.09.2002 இலிருந்து நடைமுறைப்படுத்தியுள்ளோம். ஆகவே, அத்தியாவசிய தேவைகளுக்கு பனைமரம் தறிக்க விண்ணப்பிப்போர் உங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு நடைமுறைப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

- பனை தென்னை அபிவிருத்திப் பகுதி, யாழ்.மாவட்டம்.
(8552)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.